# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 11 திங்கட்கிழமை (25-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:211


நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீது

## ஜே.வி.பியின் எம்.பிக்கள் பத்துப் பேரும் தத்தமது விருப்பப்படி வாக்களிக்க அனுமதி

கொழும்பு,ஜூன்25

அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சுயமாகத் தீமானித்து தத்தமது விருப்பத்திற்கேற்ப வாக்களிப்பதற்கு அந்தக் கட்சியின் மத்திய குழு அனுமதி வழங்கியுள்ளது.

அந்தக் கட்சியின் மத்திய குழு நேற்றுமுன்தினம் மாலை இரகசிய இடம் ஒன்றில் கூடியது. நேற்று அதிகாலை வரை தொடர்ந்த அந்தக் கூட்டத்தின் முடிவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கி அரசைக் கவிழ்க்க வேண்டும் என்று ஒரு சாராரும் -

ஆட்சி மாற்றம் தேவையில்லை என்று மற்றொரு சாராரும் -

கருத்துக்களை முன்வைத்ததால் கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

ஒருமித்த முடிவு ஒன்று எட்ட முடியாத நிலையில் -

தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்துப் பேரும் சுயமாகத் தீமானித்து தமது விருப்பத்துக்கேற்பச் செயற்படுவதற்கு அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இவ்விடயத்தில் தங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயமாகச் செயற்படுவர் என்று ஜே.வி.பியின் பிரசாரச்செயலாளர் விமல் வீர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜானகபுரவில் சிப்பாய் பலி

கொழும்பு,ஜூன்25

வெலிஓயாவுக்குத் தென் மேற்கே ஜானகபுரவில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; படையினர் ஐவர் காயமடைந்தனர்.

சிறுரக ஆயுதங்கள் மற்றும் ஆர்.பி.ஜிக்கள் கொண்டு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும -

படையினர் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டு அந்தத் தாக்குதலை முறியடித்தனர் என்றும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-3-9)

# ஆயுதக் கொள்வனவுகளுக்கான சகல கொடுப்பனவுகளும் நிறுத்தம்

## தொடரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாது திணறுகிறது அரசு

கொழும்பு,ஜூன்25

**தொடரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறும் ஸ்ரீலங்கா அரசு ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பான சகல கொடுப்பனவுகளையும் வழங்காமல் இடைநிறுத்தி வைக்க முடிவு செய்திருக்கிறது.**

**இது பற்றிய விவரம் முப்படைகளுக்கும் அரசினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.**

"த சண்டே ஐலண்ட்" பத்திரிகையில் "Government freezes war payments as financial crisis hits Treasury" என்ற தலைப்பில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் வரைந்த கட்டுரையிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அக்கட்டுரையின் முற்பகுதியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடகிழக்கு முனையில் இவ்வாரம் அனைத்தும் அமைதியாக இருக்க -

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களின் தகவல்களின்படி ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பான சகல கொடுப்பனவுகளையும் தொடரும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாகச் செலுத்தாமல் அரசு முற்றாக நிறுத்தியிருப்பதாக இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை 17,18 இல் நாடாளுமன்றுக்கு வரும்

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் அடுத்த மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேரணை மீதான வாக்கெடுப்பு அனேகமாக 18 ஆம் திகதி இடம்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பான முடிவை எடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் ஒன்றை எதிர்வரும் 4 ஆம் திகதி சபாநாயகர் நடத்தவுள்ளார். இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அவர் சகல கட்சிகளினதும் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள அழைப்பில் கேட்டுள்ளார். (உ-3)

## சனத்தொகைக் கணக்கெடுப்புப் பணியை யாழ். குடாநாட்டில் நிறுத்தினால் வழக்கு

### சிங்கள அமைப்புகள் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜூன்25

யாழ். குடாநாட்டில் குடிசன மதிப்பீட்டுப் பணிகளை நிறுத்துமாறு ஈ.பி.டி.பி. விடுத்துவரும் கோரிக்கையை ஏற்று -

அந்தப் பணியை அரசு நிறுத்துமானால் அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப் போவதாக தேசிய சிங்கள அமைப்புக்கள் சில எச்சரிக்கை விடுத்துள்ளன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வாழ்வதால் குடிசன மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலை அங்கு இல்லை என்றும் -

இதன் காரணமாக குடிசன மதிப்பீட்டுப் பணிகளை அங்கு மேற்கொள்வதை நிறுத்தும்படியும் -

ஈ.பி.டி.பி. ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

இதே கோரிக்கையை ஏனைய தமிழ்க் கட்சிகளும் அரசிடம் விடுத்துள்ளன.

இந்நிலையில் -

சிறிய அரசியல் கட்சிகளின் கோரிக்கைக்கு அரசு இணங்கி மதிப்பீட்டுப் பணியை நிறுத்தினால் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவோம் என்று பல தேசிய சிங்கள அமைப்புகள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி, ரெலோ, காங்கிரஸ் தேசத்துரோகம் புரிந்துவிட்டன

சாடுகிறார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க

கொழும்பு,ஜூன்25

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்டதன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய மூன்று தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்களும் தேசத்துரோகம் புரிந்துவிட்டனர்.

இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

மெனரிகம பகுதியில் உள்ள விகாரை ஒன்றில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை விரைவில் ஆரம்பிக்கவேண்டும். அரசைக் கவிழ்க்க முடியும் என்று கனவு காண்பவர்கள் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது தமது தவறை உணர்ந்துகொள்வர்.

கடந்த பொதுத் தேர்தலில் பொது மக்கள் அளித்த ஆதரவைப் பயன்படுத்தி அரசாங்கம் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் ஆட்சிபுரியும் - என்றார். (உ-7-9)

### இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்25

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சமபவம் ஒன்றில் உயிரிழந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் கொடிகாமம் பொலீஸாரால் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுமார் 24 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலத்தின் வயிற்றுப்பகுதி மற்றும் மார்புப் பகுதி போன்றவை குண்டு வெடிப்பினால் சிதைந்த நிலையில் காணப்பட்டன.

இச் சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டும், இனங்காணும் பொருட்டும் யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பலாலி - இரத்மலானை

## விமானப் பயணச் சீட்டுக்கள் 3 மாதங்கள் செல்லுபடியாகும்

யாழ்ப்பாணம்,ஜூன்25

பலாலி - இரத்மலானை விமானச் சேவையில் பயணம் செய்யும் பயணிகள் கொள்வனவு செய்யும் பயணச் சீட்டுகள் செல்லுபடியாகும் காலம் இரு மாதங்களில் இருந்து மூன்று மாதங்களாக நீடிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது

பயணிகள் தமது பயணச் சீட்டுக்களைப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் திகதிக்கு 14 நாள்களுக்கு முன்னரே கொள்வனவு செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது என்றும -

பயணச் சீட்டுக்களை காலை 9 மணிமுதல் நண்பகல் ஒரு மணிக்குள் கொள்வனவு செய்ய முடியும் என்றும் -

சிவில் நிர்வாக அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

படையினரின் தேவைக்காக

## இரவு நேர மீன்பிடிக்கு வடமராட்சியில் அனுமதி!

தென்மராட்சி,ஜூன்25

யாழ்.குடாநாட்டில் கடமையாற்றும் படையினருக்குத் தேவையான மீனைப் பெறும் வகையில் வடமராட்சிக் கடற்பரப்பில் இரவுநேர மீன்பிடிக்கு படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர் சங்கத்தின் சமாசப் பிரதிநிதிகளை அண்மையில அழைத்த படையினர் இது தொடர்பான அனுமதியை வழங்கியுள்ளனர் என சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

இரவுநேர மீன்பிடி குறித்து படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வல்வெட்டித்துறை தொடக்கம் பருத்தித்துறை முனை வரையிலான கடற்பரப்பில் கரையிலிருந்து 7 கிலோ மீற்றர் தூரம் படையினரின் பாதுகாப்புடன் சுமார் 20 படகுகள் மீன்பிடியில் ஈடுபடும்.

ஒவ்வொரு படகிலும் தலா இரண்டு மீனவர்கள் செல்ல அனுமதிக்கப்படுவர். மீன்பிடிக்கப்படும் இடங்களில் விசைப்படகுகளில் படையினர் பாதுகாப்பு வழங்குவர். தினமும் மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணிவரை மீன்பிடி இடம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### அரசுப் படைகளுக்கு ஏற்பட்டுவரும் பின்னடைவுகள் காரணமாக

# சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறு வழி ஏதும் இல்லை!

கொழும்பு,ஜூன்25

யுத்தத்தில் அரசுப் படைகளுக்கு ஏற்பட்டுவரும் பெரும் பின்னடைவுகள் காரணமாக, அவசரமாகப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் தெரிவைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வேறு வழிகள் இல்லை.

- இவ்வாறு கூறியிருக்கின்றார் பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ்.

நேற்று வெளியான 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் தாம் வரைந்த 'நிலைவர அறிக்கையிலேயே' அவர் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இவ்வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கவனத்தை அரசியல் விவகாரங்கள் அதிகம் ஈர்த்தன என்றால், மறுபுறத்தில் நாட்டின் பாதுகாப்பு விவகாரத்தில் அந்த வீழ்ச்சிகள் காட்டும் முற்குறிகள் கவலை தருபவையாக அமைந்திருக்கின்றன.

சமாதான் முயற்சிகள் தேக்கமடைந்து, அதுவும் ஆயுதங்களும் குவிக்கப்பட்டதன் பின்னணியில், கிழக்கைச் செயலிழக்க வைக்கும் புலிகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்திருப்பது பாதுகாப்பு வட்டாரங்களில் அதிகபட்ச பீதியை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையால் எழக் கூடிய விளைவுகள் மேலும நிச்சயமற்ற பெரும் விபரீத நிலைக்கு வழி செய்துள்ளன.

படைகளின் பதில் பிரதம அதிகாரியும் விமானப்படைத் தளபதியுமான எயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி, தமது இரு சகாக்களான இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி சகிதம் புலனாய்வுத்துறை உயர் அதிகாரிகள் உட்பட தத்தமது சிரேஷ்ட அதிகாரிகளுடன் தற்போது நிலவும் நிலைமை குறித்து அண்மைய வாரங்களில் ஒழுங்காகக் கூடி ஆராய்ந்து வருகின்றார். அம்பலமாகுகின்ற தற்போதைய நிலைமை மிக மோசமானது என்பதை உணரக்கூடியதாக உள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பெரிய இராணுவ நடவடிக்கைகளையோ, விமானத் தாக்குதல்களையோ தவிர்க்கும்படி பாதுகாப்புப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ள அதேசமயம், விடுதலைப் புலிகள் தமது தாக்குதல் செயற்பாட்டை மிக மெதுவாக - ஆனால் மிக உறுதியாக - முன்னெடுக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். இதனைப் பலமாக உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் அதிகளவில் வெளிப்பட்டு வருகின்றன.

அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலின் கூட்டத்தில் இந்த விடயங்கள் எழுப்பப்படவிருக்கின்றன.

**காத்திருந்த தளபதிகள்**

தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காகப் பாதுகாப்புப் படைகளின் தளபதிகள் கடந்த வியாழக்கிழமை மாலை ஜனாதிபதி மாளிகையில் கூடினர். என்றாலும், ஜனாதிபதி வேறு பணிகளில் 'பிஸி' ஆக இருந்தார்.

அக்கூட்டம் பின்னர் வெள்ளிக்கிழமை காலைக்கு ஒத்திவைக்கப்பட்டது. எனினும், மிக முக்கிய வேறு கூட்டம் ஒன்றுக்குத் தம்மைத் தயார்ப்படுத்துவதற்காக பிந்திய நேரம் வரை ஜனாதிபதி பணியாற்ற வேண்டியிருந்ததால், அதுவும் ரத்துச் செய்யப்பட்டது.

அந்த முக்கிய கூட்டம் போர் சம்பந்தமானது அல்ல; சமாதானம் சம்பந்தமானது.

**ஜனாதிபதி - ரணிலின் இருமணி நேரப் பேச்சு**

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மாளிகைக்குள் நுழையவும் பாதுகாப்புப் படைத் தளபதிகள் அங்கிருந்து வெளியேறவும் சரியாக இருந்தது. தேசியப் பாதுகாப்புக் கவுன்ஸிலின் கூட்டம் நடைபெறாது என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, ரணில் விக்கிரமசிங்கவுடன் இரண்டு மணி நேரச் சந்திப்பில் ஜனாதிபதி குமாரதுங்க தம்மை ஈடுபடுத்தினார்.

பேச்சுக்கு உதவியாகப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இருந்தனர்.

நோர்வேயின் ஏற்பாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முன்முயற்சிகள் தொடர்பாக அரசு காட்டும் முன்னுரிமையை இந்தச் சந்திப்பு வலியுறுத்துவதாக இருந்தது.

விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் பணியை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் த்ரொப் ஜோன் ஜாக்லண்ட் மட்டத்துக்கு அரசு உயர்த்தி ஆக ஒரு மாதமே முடிவடைந்த நிலையில், அரசு - எதிர்க்கட்சி இடையே உயர்மட்டத்தில் நடந்த முதலாவது சந்திப்பு இதுவாகும்.

ஜூன் 7 ஆம் திகதி ஜனாதிபதி குமாரதுங்கவையும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரையும் ஜாக்லண்ட் சந்தித்த பின்னர் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் "விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட சமாதானப் பேச்சுக்களை மேலும் முன்னெடுப்பதற்காக நோர்வேத் தரப்பு அதில் உயர் மட்டத்தில் பங்குபற்றும் என்று முடிவு செய்யப்பட்டது" - எனத் தெரிவிக்கப்பட்டது. அதாவது ஏற்பாட்டாளர் என்ற பணியில் ஜாக்லண்ட் தாமே முன்னிலை வகிப்பார் என்பது தெளிவாகியுள்ளது.

சொல்ஹெய்மின் பங்குபணி தற்போது தரம் குறைக்கப்பட்டுள்ளதாயினும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்குடன் அவரும் பேச்சுக்கான அணியில் உறுப்பினராக இன்னும் பணியாற்றுகின்றார்.

வெளிப்பிரசாரங்கள் ஏதுமின்றி கடந்த ஐந்து வாரங்களாக ஜாக்லண்ட் செயலில் இறங்கியிருக்கின்றார். இது விடயத்தில் அரசுடனான இராஜதந்திரத் தொடர்புகளைத் தொலைபேசி ஊடாகக் கதிர்காமருடன் அவர் பேணிவருகின்றார்.

செயற்பாட்டு வரன்முறைகள் பற்றிய விவகாரம் கலந்தாலோசனைக்கு வரும்போது, தனது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு அரசு தள்ளப்படும்.

**இடைநிலை ஏற்பாட்டாளர்**

இத்தகைய விடயங்களில் - விவகாரம் மிக முக்கியமானது என்பதால் - எதிர்க்கட்சியுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து அதனடிப்படையில் உரிய பதிலை வழங்குவது மிகச சிறந்ததாக அமையும். இது விடயத்தில் இருதரப்பிடையேயும் இடை நிலை ஏற்பாட்டாளர் பணியைச் செய்பவராக விளங்குபவர் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்வதற்கு தனித்துத் தானே பொறுப்பாக இருந்தவரும் அவரே.

முதல் நாள் இரவு பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் பாயிட் ஹக்கானிக்கு தாம் வழங்கிய பிரிவுபசார விருந்தைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும், இந்தப் பேச்சுக்காகக் காத்திருக்கும்படி கேட்கப்பட்டிருந்தார்.

உரிய நேரடி சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட முன் தீர்க்கப்படவேண்டிய சில முக்கிய விடயங்கள், குமாரதுங்க - விக்கிரமசிங்க சந்திப்பில் முக்கிய இடத்தைப் பெற்றன. அவற்றில், தமது இயக்கம் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கை, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குதல், மோதல் தவிர்ப்பு ஆகியனவும் அடங்கியிருந்தன.

அங்கு - சந்திப்பில் - வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் வேறுபட்டிருந்தன.

தடை நீக்கம் - அத்தியாவசியமானால் - சமாதானப் பேச்சுக்களின் பின்னரே செய்யப்படலாம் என்பதுதான் இப்போதும் அரசின் கருத்தாக உள்ளது.

இந்தச் சிக்கலான விவகாரத்தில- வெளிநாட்டு அரசுகளின் - குறிப்பாக விடுதலைப் புலிகள் மீது தத்தமது நாடுகளில் தடை விதித்துள்ள நாடுகளின் - கருத்தை அரசு அறிந்துகொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டதைத் தவிர, தனது கருத்தையோ, தமது கட்சியின் நிலைப்பாட்டையோ குறிப்பிடாமல் எச்சரிக்கையுடன் தவிர்த்துக் கொண்டார் விக்கிரமசிங்க.

பொருளாதாரத் தடைகளைத் தளர்த்துவது தொடர்பான விடயத்தில் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது.

மோதல் தவிர்ப்பு விடயத்தில், மோதல் இடம்பெறாமல் தவிர்க்கும் வகையிலான வழிநடத்தல்களுக்குரிய செயற்பாட்டு வரன்முறைகள் இனிமேல்தான் வகுக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி குமாரத்துங்கவுக்கும் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடலில் இடம்பெற்ற விவரங்களை வெளிப்படுத்தும் அறிக்கை ஒன்று அடுத்த வாரத்தில் எந்நேரத்திலும் வெளியிடப்படலாம். மேலதிகமாக ஏதேனும் திருத்தங்கள் அல்லது விவரங்கள் அவசியம் என்று எதிர்கட்சித் தலைவர் கருதும் நிலை ஏற்பட்டால் அவர் தனது அறிக்கை ஒன்றையும் வெளியிடுவார் என ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி செயலகம் விடுத்த சிறிய அறிவிப்புப்படி -

அரசும் ஐ.தே.கட்சியும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஆக்கபூர்வமான பேச்சுக்களில் ஈடுபட்டன.

அரசைக் கவிழ்ப்பதற்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்னெடுக்கும் எதிரணியின் நடவடிக்கை ஒருபுறமிக்க -

மறுபுறத்தில் விரக்தி மனப்பாங்கில் இருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்கள், கவலையை ஏற்படுத்துகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கும் காரணத்தினால் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விடயத்தில் பொதுவான இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் உள்ளனர்.

**படைகள் எதிர்கொள்ளும் பெரும் பின்னடைவுகள்**

1999 இல் வன்னியில் பாதுகாப்புப் படைகள் மாபெரும் பின்னடைவுகளைச் சந்தித்தது தொடக்கம், அடுத்த ஆண்டில் ஆனையிறவை இழந்து தீவிரவாதிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் ஆபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்தும் யுத்தச் செலவுகளுக்காக பல நூறு கோடி ரூபா நிதி கொட்டப்பட்டுள்ளது.

இந்தச் செலவினத் தொகை, 1994 இல் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த கையோடு ஆரம்பிக்கப்பட்ட பேச்சுக்கள் தோல்வியடைந்ததை அடுத்து புலிகளை அழிக்கும்படி பாதுகாப்புப் படையினருக்கு அரசு உத்தரவிட்டபோது ஏற்பட்டதிலும் பார்க்கக் கூடவாகும்.

பாதுகாப்புப் படைகளை நவீனமயப்படுத்துவது என்றுமில்லாதவாறுள்ளது. நவீன நுட்பமான குண்டுவீச்சுக் கலங்களையும் தாக்குதல் ஹெலிக்கொப்டர்களையும் விமானப் படை சுவீகரித்துள்ளது. இராணுவம் தன்பங்குக்கு டாங்கிகள், பீரங்கிகள், பல்குழல் றொக்கட் லோஞ்சர்கள் போன்றவற்றை வாங்கிச் சேர்த்துக் கொண்டது.

கடற்படையோ இந்தியாவிடமிருந்து நவீன கடல்வழி ரோந்துக் கலம் மற்றும் இஸ்ரேலிடமிருந்து வேக - ஏவுகணை - கலங்கள் இரண்டு ஆகியவை உட்பட பல கலங்களைப் பெற்றுக் கொண்டது. பாரிய படகுகள் கடற்படைக்கு ஆழ் கடற்பரப்பில் முழு ஆதிக்கத்தையும் அளிக்கும என எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் 6 வருடங்களின் பின்னர் - பலநூறு கோடி ரூபா பணம் செலவிட்ட பின்னர் - இந்தப் பதினெட்டு வருட காலப் பிரிவினைப் போருக்கு இயன்ற விரைவில் சமாதானத் தீர்வு காண்பதே சரியான பதில் என்று இப்போது அரசு உணருகின்றது. ஜனாதிபதி குமாரதுங்க தனது இருதலைக் கொள்ளி எறும்பு நிலையை அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறார். பிரதி அமைச்சர்களுக்கும் அவர்களது பாரியார்களுக்கும் கடந்த 15 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் தாம் வழங்கிய இரவு விருந்தின் போது உரையாற்றிய அவர், யுத்த முயற்சிகளுக்கும் படை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் அஞ்சலி

பிரபல கிறிஸ்தவ ஆசிரியர்

**திரு.R.வசந்தன்**

அவர்களின் அன்புத் தந்தை

### றெமிசியஸ் தம்பிநாயகம்

**அவர்கள் 21.06.2001 காலமானதையிட்டு அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள்.

**பொருளியற் கல்லூரி,**

யாழ்ப்பாணம், இணுவில்

(89418)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசரத்தினம் இராஜேஸ்வரி

கீரிமலை, கருகம்பனையை பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை, துர்க்காபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் இராஜேஸ்வரி நேற்று (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசரத்தினத்தின(K.R) அன்பு மனைவியும் நவனீதனின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-06-2001) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை சப்பிட்டியான் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:-
இராசரத்தினம் (K.R.)
(கணவன்)

*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை.*

(89420)

### உடையார் குமாரசுவாமி (மூளாய்)

முன்னாள் அச்சுவேலி கோயில்பற்று உடையாரும், மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை ஆசிரியரும், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை அதிகாரசபை உறுப்பினரும், சங்கானை, சுழிபுரம் கிராசபைகளின் மூளாய் வட்டார உறுப்பினராகத் தொடர்ந்து பலமுறை போட்டி இன்றித் தெரிவு செய்யப்பட்டவரும், தொல்புரம், மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய நிதி சங்கத்தின் ஆரம்பகால லிகிதரும் யாழ்.பங்கசாலை வீதி, குருபால ஆச்சிரமத்தைச் சேர்ந்த உடையார் குமாரசுவாமி நேற்று (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகரத்தினம் தம்பதிகளின் மகனும் இருபாலை, பட்டையடி நாகலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும், கற்பகத்தின் கணவரும், தீபானந்தகுமாரின் தந்தையும், திருமதி கந்தையா, திருமதி இளையதம்பி (ஆயா), கொழும்பு, திருமதி வைத்தியநாதன்('ஆனைப்பந்தி', தொல்புரம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25-06-2001) திங்கட்கிழமை காலை 11 மணியளவில் பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
சன் கந்தையா
(மருமகன்)

*உடையார் வீடு,*
*மூளாய், சுழிபுரம்*

(C/17219)


மணீஸ் வெளியீடு நடத்தும்

## போட்டிப் பரீட்சை

**தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில்**

**முன்மாதிரிப் போட்டிப் பரீட்சை 2001**

**போட்டிப் பரீட்சை 02 இற்கான வெட்டுப்புள்ளி அடிப்படையிலான பெறுபேறுகளின் விவரம்.**

| | | |
|---|---|---|
| 01.சி.சாயிதா | - 179 | (யா/வட. இ. ம. க.) |
| 02.ஸ்ரீ.ரஜீபவன் | - 178 | (யா/கர. ஞா. க.) |
| 03.தெ.பிரணவன் | - 168 | (யா/திக். வி. வி.) |
| 04.ச.விதுரன் | - 165 | (யா/திக். வி. வி.) |
| 05.பி.யாசினி | - 163 | (யா/துன். மெ. மி. த. க. பா.) |
| 06.வ.கோபிகா | - 162 | (யா/இய. அ. மி. த. க. பா.) |
| 07.கி.மயூரேசன் | - 159 | (யா/வேதா. வி.) |
| 08.பா.கோகுலன் | - 158 | (யா/புற். மகா வித்தியலயம்) |
| 09.அ.சஜீவன் | - 158 | (யா/உடு. அ. மி. த.) |
| 10.ப.நிஷானி | - 154 | (யா/நெ. மெ. மி. த. க. பா.) |
| 11.சொ.அருண் | - 151 | (யா/மாணி. வி.) |
| 12.த.பிரதீபா | - 151 | (யா/மே. பு. சை. பி. வி.) |
| 13.அ.பிரியங்கா | - 149 | (யா/நெ. மெ. மி. த. க. பா.) |
| 14.சி.கௌதமி | - 148 | (யா/நெ. மெ. மி. த. க. பா.) |
| 15.யோ.ராஜினி | - 148 | (யா/நெ. மெ. மி. த. க. பா.) |

**சிறப்புப் பெறுபேறுகள் பெற்ற முதல் 10 மாணவர்களின் பரிசுகளை கோற்றிய கல்வி நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பரீட்சை இரண்டுக்கான திருத்தப்பட்ட விடைத்தாள்களையும், 05.07.2001இல் நடைபெற உள்ள போட்டிப் பரீட்சை 3 இற்கான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.**

**பரீட்சைக் கட்டணம் 20/=**

சதாபொன்ஸ் - அல்வாய்
கேம்பிரிட்ஜ், - நவிண்டில்
டால்ரன் - துன்னாலை
கலைவாணி - கரவெட்டி

விண்ணப்ப படிவங்கள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்

**மேலதிக விவரங்களுக்கு:**

**சதாபொன்ஸ் அல்வாய்.**

**தொலைபேசி: 070 212360 & 3206 (PQ)**

(C/17220)

மணீஸ் வெளியீடு

# பெருவில் நிலநடுக்க அனர்த்தம்;

# இடிபாடுகளில் சிக்கி 40 பேர் பலி!

லிமா,ஜூன்25

**தென்அமெரிக்க நாடுகளான பெரு, பொலிவியா, சிலி ஆகிய நாடுகளில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட பலத்த நிலநடுக்கத்தில் குறைந்தது 40 பேர் உயிரிழந்தனர்; நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.**

பெருநாட்டின் தலைநகரான லிமாவுக்குத் தெற்கே கடல் எல்லைப் பகுதியிலிருந்து 600 கிலோ மீற்றர்கள் தொலைவில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் நேற்று முன்தினம் இரவு உள்ளூர் நேரப்படி சுமார் 8.30 மணியளவில் ஏற்பட்டது.

சுமார் 60 விநாடிகள் இந்த நிலநடுக்கம் நீடித்ததாகவும் -

ரிச்டர் அளவுகோலில் 7.9 என்ற அளவில் நிலநடுக்கம் பதிவாகியிருந்ததாகவும் - கூறப்படுகிறது.

இந்த நிலநடுக்கத்தில் பெரு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கட்டடங்கள் இடிந்து தரைமட்டமானதில், இடிபாடுகளுக்குள் சிக்கி 40 பேர்வரை உயிரிழந்துள்ளனர்.

இடிபாடுகளை அகற்றும் பணிகள நடைபெற்று வருவதாகவும் - அவற்றுக்குள் மேலும் சடலங்கள் இருக்கலாம் என்று அஞ்சப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக அரங்கில்


இதேசமயம், இந்த நிலநடுக்கத்தின் தாக்கத்தால் பெருவின அயல் நாடுகளான பொலிவியா, சிலி ஆகிய நாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நாடுகளில் கட்டடங்கள் சேதமடைந்ததுடன் தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.(ஒ)

## கிளின்ரனுக்கு சமாதான விருது

பொஸ்னியப் போருக்குத் தீர்வு காண முயற்சிகளை மேற்கொண்ட அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்ரனுக்கு நேற்றுமுன்தினம் 'டேடன் சமாதான விருது' வழங்கப்பட்டது.

முன்னாள் அமெரிக்க அதிபருக்கு விருது வழங்கும் விழாவில் பொஸ்னியா மற்றும் குரோஷியாப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஒ)



**இந்த நூற்றாண்டின் முதல் சூரிய கிரகணம் கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை நிகழ்ந்தது.**

**சிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேக்கு 175 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள மௌரடோனா மலைப்பகுதியில் தென்பட்ட சூரிய கிரகணத்தில் சில கட்டங்களைப் படங்களில் காணலாம்.**

# அமெரிக்க நிலைகளைத் தாக்க பின்லேடனின் சகாக்கள் திட்டம்



ரியாத்ஜூன்25

சர்வதேசத் தீவிரவாதியான ஒசாமா பின்லேடனின் சகாக்களான இரு தீவிரவாதிகள் உலகம் எங்கிலும் உள்ள அமெரிக்க, இஸ்ரேலிய இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அரபு தொலைக்காட்சிச் சேவை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு அருகில் பின்லேடனை கடந்த சில நாள்களுக்கு முன்னர் கண்டதாகச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த சில வாரங்களில் வியக்கத்தக்க பல சம்பவங்களை எதிர்பார்க்கலாம் என்று பின்லேடனின் ஆதரவாளர்கள் கூறியதாக அரபுத் தொலைக்காட்சி தெரிவித்தது.

அமெரிக்கா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வளைகுடாப் பகுதியில் அதன் நிலைகளில் பாதுகாப்புக்களைப் பலப்படுத்தியுள்ளது.

### யூகோஸ்லாவிய நாடாளுமன்றத்தில்

# மிலோசெவிக்கை நாடுகடத்தும் பிரேரணைக்கு முட்டுக்கட்டை

பெல்கிரேட்,ஜூன்25

யூகோஸ்லாவிய முன்னாள் அதிபர் சொலோபொடான் மிலோசெவிக்கை சர்வதேச நீதிமன்றத்திடம் கையளிப்பது தொடர்பான பிரேரணைக்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் விவாதத்துக்கு ஏற்காமல் விலக்கிக் கொண்டது.

மிலோசெவிக்கை ஆதரித்தும் சோஷலிச மக்கள் கட்சியின் எதிப்பைத் தடுத்து அக்கட்சியுடன், ஆளும் கூட்டணி உடன்பாட்டுக்கு வரத்தவறியதை அடுத்தே இந்த பிரேரணை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. யூகோஸ்லாவியக் குடிமகனை நாடு கடத்த வாய்ப்பளிக்குமாறு சட்டத்தைத் திருத்துவதற்காகவே இந்த பிரேரணை நிறைவேற்றப் பட இருந்தது.

பிரேரணை அங்கீகரிக்கப்படாததால், நாட்டுக்கு ஏற்படப் போகும் பாதகங்களை சோஷலிஸ மக்கள் கட்சியினர் உணரவில்லை என்று நாடாளுமன்றக் கீழ் சபைத் தலைவரான டிரகோல்ஜப் மிகுனோவிக் தெரிவித்தார்.

அல்பேனியர்களுக்கு எதிரான இனப்படுகொலைகள் தொடப்பான விசாரணைகளுக்காக, மிலோசெவிக்கை சர்வதேச நீதிமன்றத்திடம் கையளிக்குமாறும் -

இல்லாவிட்டால், யூகோஸ்லாவியாவுக்கு சர்வதேச உதவிகள் கிடைக்காமல் போகும் என்றும் -

அமெரிக்கா உட்படப் பல நாடுகள் நிர்ப்பந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

### மேற்கு வங்க மாநிலத்தில்

# கங்கையில் படகு கவிழ்ந்து 50 பயணிகள் இறந்தனர்!

கொல்கத்தா,ஜூன்25

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலம், மால்டா மாவட்டத்தில் கங்கை ஆற்றில் நேற்று படகு ஒன்று கவிழ்ந்ததில் சுமார் 50 பேர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சுமார் 120 பேர் அந்தப் படகில் பயணஞ் செய்துகொண்டிருந்ததாகவும் -

ஆற்றில் வெள்ளம் பெருகிப் பாய்ந்ததால், படகோட்டிகளின் கட்டுப்பாட்டை இழந்த படகு, வெள்ளத்தில் சிக்கிக் கவிழ்ந்ததாகவும் -

உயிர் தப்பியவர்கள் தெரிவித்துள்ளனர்.

முக்குளிப்பவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான மீட்புப் பணியாளர்கள் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இது வரை மூன்று சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன.

### கொசோவா யுத்தத்தின் போது

# அல்பேனியப் பெண்களின் சடலங்கள் குளிரூட்டப்பட்ட 'டிரக்'கில் கடத்தல்

### விசாரணை மன்றத்தில் சாட்சியம்

பெல்கிரேட்,ஜூன்25

கொசோவாவில் யூகோஸ்லாவியப் படைகள் நிகழ்த்திய படுகொலைகள் குறித்து யுத்தக் குற்றங்களை விசாரிக்கும் அமைப்பிடம் செர்பியர் ஒருவர் சாட்சியமளித்தார்.

1999ஆம் ஆண்டு யூகோஸ்லாவிய இராணுவத்தில் 'டிரக்' ஓட்டுநராகப் பணியாற்றிய இந்த நபர், கொசோவாவுக்கும் செர்பியாவுக்கும் இடையே கடமையாற்றியவராவார்.

தான் செலுத்திய குளிர்சாதன வசதியுள்ள 'டிரக்' கொசோவாவில் இருந்து செர்பிய நகருக்கு திரும்பும் போது 'மிக இரகசியமானது' என்று முத்திரை வைக்கப்பட்டிருக்கும் என்றும் -

ஒரு முறை 'டிரக்'கைத் திறந்து பார்த்த போது, போர் முனையில் இறந்த யூகோஸ்லாவிய வீரர்களின் சடலங்களுடன், அல்பேனியப் பெண்களின் சடலங்களும் இருந்ததாகவும்- அவர் கூறியுள்ளார்.

யூகோஸ்லாவிய வீரர்களின் சடலங்கள் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்ட சமயம், அல்பேனியப் பெண்களின் சடலங்கள் எங்கு புதைக்கப்பட்டன என்று தெரியவில்லை என்றும் 'டிரக்' ஓட்டுநர் மேலும் தெரிவித்தார்.

யூகோஸ்லாவியாவில் சில இடங்களில் பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

### 56 ஆண்டுகளில் முதற்றடவையாக

# சுகாதாரப் பிரச்சினைக்காக ஐ.நா.சபை கூடுகிறது

### 'எய்ட்ஸ்' குறித்து ஆராயப்படும்

உலகத் தலைவர்கள், 'எய்ட்ஸ்' நோய்க்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய இன்று ஐ.நா. சபையில் கூடுகின்றனர்.

இன்று ஐ.நா.சபையில் ஆரம்பாகும் கூட்டத் தொடரில் 26 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

ஐ.நா.சபையின் 56 வருட கால வரலாற்றில், பொதுச் சுகாதார பிரச்சினைக்காக நடைபெறும் முதலாவது கூட்டத்தொடர் இதுவாகும்.

'எய்ட்ஸ்' நோய் பற்றி கண்டறியப்பட்டு 20 வருடங்கள் ஆகின்றன. இந்தக் காலப்பகுதியில் 2 கோடி 20 லட்சம் பேர் 'எய்ட்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

'எய்ட்ஸ்' நோய்க்குக் காரணமான எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய 3 கோடி 60 இலட்சம் பேர் தற்போது தமது இறுதி நாள்களை எண்ணியபடி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பாலியல் தொடர்பு மூலமாகவே பெரும்பாலும் பரவும் 'எயட்ஸ்' நோய் தம்மைப் பீடித்திருப்பது, அந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ள 90 சதவீதமானோருக்குத் தெரியாது.

- இவ்வாறு ஐநா. 'எய்ட்ஸ்' தடுப்புத் திட்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# குடியேற்றவாசிகள் குறித்து ஐரோப்பியர்களின் பிரமை

## கோபி அனான் விசனம்

லண்டன்,ஜூன்25

அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள குடியேற்றவாசிகளை மிகப்பெரும் அச்சுறுத்தலாகக் கருதும் பிரமை ஐரோப்பியர்களிடம் ஏற்பட்டுள்ளதாக ஐநா.செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்தார்.



உலக அகதிகள் தினமான கடந்த புதன்கிழமை பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

குடியேற்றவாசிகளை வெறுத்தொதுக்கும் ஐரோப்பியர்களின் போக்கு ஐரோப்பிய ஜனநாயகத்துக்கு பிரதான எதிரியாக இருப்பதாகவும் அனான் கூறினார்.

குடியேற்ற வாசிகளை நன்மையளிக்க வருபவர்களெனக் கருதி இன்முகம் காட்டி வரவேற்பதற்குப் பதிலாக தமது பொருளாதாரம், சமூக நிலை என்பவற்றை சீரழிக்கப் போகும் அச்சுறுத்தல்காரர்களாகவே, அவர்களை ஐரோப்பியர்கள் நோக்குவதாகக் குறிப்பிட்ட அவர், அமெரிக்காவுக்குப் பெரும்புகழ் தேடித்தந்த விஞ்ஞானி அல்பிரட் ஐன்ஸ்டீன் கூட ஜேர்மனியிலிருந்து மூடை முடிச்சுகளுடன் வெளியேறிய அகதிதான் என்பதை ஐரோப்பா மறந்துவிட்டதா என்று கேள்வி எழுப்பினார்.

குடியேற்றவாசிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை உடனடியாகக் களையாவிட்டால் உலகம் முழுவதும் மிக மோசமான குழப்பங்களே எதிர்காலத்தில் மிஞ்சும் என்று கோபி அனான் கவலை தெரிவித்தார். (ஒ-9)

# சீர்திருத்தங்களை முன்னெடுக்க ஈரானிய அதிபர் கடாமி உறுதி



தெஹ்ரான்,ஜூன்25

ஈரானின் அதிபராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள மொகமட் கடாமி சீர்திருத்தக் கருத்துக்களை தொடர்ந்து உறுதியாக மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார்.

சீர்திருத்தத்தை நோக்கமாகக் கொண்டே மக்கள் தம்மை தேர்ந்தெடுத்துள்ளதாக அவர்கூறினார்.

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும், ஒரு காலடியைக் கூட, தான் பின்னோக்கி எடுத்துவைக்கப் போவதில்லை என்றும் -

பொருளாதார சிரமங்கள், வரட்சி, எண்ணெய் விலைவீழ்ச்சி ஆகியவற்றின் மத்தியிலும், சீர்திருத்தங்களை முன்னெடுக்கவே, மக்கள் தனக்கு வாக்களித்திருப்பதாகவும் கடாமி கூறினார். (ஒ)

## கேரளாவில் அடை மழைக்கு 41பேர் பலி!

திருவனந்தபுரம்,ஜூன்25

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பெய்துவரும் அடை மழையினால் இறந்தோரின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது.

10 வீடுகள் இடிந்தன. கடலோரப் பகுதிகளில் மணிக்கு 55கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசுகிறது. (ஒ)

### இரு வருட பேச்சின் விளைவாக

# கொலம்பியத் தீவிரவாதிகள் 250 கைதிகளை விடுவிப்பு

பொகோட்டா,ஜூன்25

கொலம்பிய புரட்சிகர விடுதலை இராணுவம் என்ற தீவிரவாத அமைப்பினர், தம்மிடமுள்ள 250 பணயக் கைதிகளை விடுதலை செய்வதாக அறிவித்துள்ளனர்.

கடந்த இரண்டாம் திகதி கொலம்பிய அரசுடன் செய்துகொண்ட உடனபடிக்கையையடுத்தே, தீவிரவாதிகள இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர். விடுதலை செய்யப்பட உள்ளோரில், பெரும்பாலானோர் இராணுவம் மற்றும் பொலீஸ் படையைச் சேர்ந்தவர்களாவார்கள்.

கொலம்பிய புரட்சிகர விடுதலை இராணுவம் கொலம்பியாவில் கம்யூனிஸ அரசொன்றை அமைக்க 1960-ஆம் ஆண்டு முதல் போராடி வருகிறது.

இந்தத் தீவிரவாத அமைப்புக்கும் அரசுக்கும் கடந்த 2 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த பேச்சையடுத்து இந்த மாதம் 2 ஆம் திகதி உடன்பாடு ஏற்பட்டது. (ஒ-9)

### புனரமைப்புப் பணிகள் நடக்கவுள்ளதால்

# பருத்தித்துறை-அம்பன் வீதியூடாக

# 'டிராக்டர்'கள் சென்று வரத் தடை

## மணல் ஏற்ற வசதி செய்வதாக பிரதேச சபைத் தலைவர் உறுதி

வடமராட்சி, ஜூன் 25
பருத்தித்துறை — அம்பன் வீதி 20 வருட இடைவெளிக்குப் பின்னர் திருத்தப்படவுள்ளதால் வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் மணல் அகழ்ந்து வரும் டிராக்டர்கள் அவ்வீதியால் செல்ல ஒரு மாத காலத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் ஏற்றும் டிராக்டர் உரிமையாளர் சங்க கலந்துரையாடலின் போது பருத்தித்துறைபிரதேசசபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

புலோலி பொது நூல் நிலைய மண்டபத்தில் வடமராட்சி கிழக்கில் மணல் ஏற்றும் டிராக்டர் உரிமையாளர் சங்கத் தலைவர் கே. செல்வ மாணிக்கம் தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலின் போது பருத்தித்துறைபிரதேசசபைத் தலைவர் மேலும் கூறியதாவது:-

இருபது வருட இடைவெளிக்குப் பின்னர் பருத்தித்துறை அம்பன் வீதியை வீதி அபிவிருத்தி அதிகார சபை திருத்தவுள்ளதால் அவ்வீதியால் மணல் ஏற்றிச் செல்லும் டிராக்டர்களை சேவையிலிருந்து இடைநிறுத்துமாறும் இல்லையேல் திருத்த வேலைகள் பாதிப்படையுமெனவீதி அபிவிருத்தி அதிகாரசபை எமது சபையைக் கேட்டுள்ளது.

அதனால் டிராக்டர்களில் அவ் வீதியால் மணல் ஏற்றிச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மணல் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் வடமராட்சிக் கிழக்கு கரையோரப்பகுதியில் அகழப்படும் மணலை ஏற்றிச் செல்ல மாற்றுவழி ஒன்றை ஆலோசித்து வருகின்றோம்.

வடமராட்சிக் கிழக்கு உதவித் திட்டப் பணிப்பாளர்கள் ஈசுரபாதம் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் அ. நடராசா ஆகியோரும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

(க-173)

# தாவடிதெற்கு காளி கோயிலுக்கு 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வலிகாமம்தெற்கு, ஜூன் 25
தாவடி தெற்கு ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தான வளர்ச்சிக்கு ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் தெற்குப் பிரதேச சபைத்தலைவரான .ந கமலசேகரன் தெரிவித்துள்ளார்.

தாவடி தெற்கு ஸ்ரீ காளி அம்பாள் சன சமூக நிலையம், ஸ்ரீ காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து ஸ்ரீ காளி அம்பாள் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்தின.

அம்பாள் விளையாட்டு மைதானத்தில் அ. மதியழகன் தலைமையில் நடந்த இப்போட்டிகளின் பிரதம விருந்தினராக க கமலசேகரன் கலந்து கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்—வறிய மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும். அவர்களின் கஷ்டங்களை மனதில் எடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிகொண்டுள்ளார். எனது பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளிகள் என்பவற்றின் தேவைகளை நிறைவு செய்வேன். முன்பள்ளி ஆசிரியைகளுக்கு நாம் மாதாந்த வருமானமாக ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கி வருகின்றோம்.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட திருத்தப்படாத வீதிகள் யாவும் இவ்வருடம் திருத்தப்படும் எனக் கூறினார்.

(க-152)

# ஐந்தெழுத்தின் விளக்கமாக அமைந்த திருவாசகமென்னும் தித்திக்கும் தேன்

திருவாசகத்தை ''மாணிக்கவாசகம்; தெய்வத்திருநெறி, சைவப்பெருநெறி, சமரச சன்மார்க்கப் பொதுநெறி தித்திக்கும் திருவாசகத்தேன்'' என்றெல்லாம் பலவாறு பேரன்பர்கள் புகழ்வது மிகையாகாது. ஆம்! திருவாசகத்திற்கு உருகாதவர்கள் வேறு ஒரு வாசகத்திற்கும் உருக மாட்டார்கள். சிவனடியார்கள் உள்ளம் சருணை நெறி ததும்பிப்பாடிப் பரவசமடைவதற்குத் திருவாசகத்தைத் தவிர வேறொன்றுமில்லை எனலாம்.

**இன்று மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசைத் தினம்.**

தேன் மிகவும் இனிமையானது. பல்வேறு உணவுப் பண்டங்களைச் சில நாள்களுக்கு மேல்வைத்து உண்ண முடியாது. ஆனால் தேன் மட்டும் எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் கெட்டுப் போகாது, இதுபோல திருவாசகமும் ஒருநாளும் அழியாத சிதையாத சிறப்புடையது.

இனித்தேன் தான்கெடாத தோடன்றித் தன்னில் ஊறவைத்தஇஞ்சி மற்றும் பழவகைகளையும் கெடவிடாது. அதுபோல்திருவாசகமும்தான் அழியாதது மட்டுமன்றித் தன்னை ஓதுவாரையும் அழியாமல் காக்கும் திறனுடையது. ''எல்லை மருவா நெறியளிக்கும் திருவாசகமென்னும் தேன்'' அல்லவா?

தேன் பல பிணிகளை எளிதில் போக்கவல்ல மருந்து. நமக்குத் தொல்லை தரும் பிறவிப் பிணியை மாற்றுவது திருவாசகத் தேன்.

'தொல்லையிரும் பிறவிச் சூழும் தளை நீக்கும்' திருவாசகத்தேன் அறியாமையை அகற்றும் அல்லல்கள் அனைத்தும் அறியாமையால் விளைகின்றன. மக்கள் அறியாமையால் இடர்களை எய்துகின்றனர். இத்தகைய அறியாமையை அறவே களைந்து 'அல்லல் அறுத்து' சிவானந்தத்தையளிப்பது திருவாசகத் தேன்.

### தேன் என்னும் இனிய சொல்

திருவாசகத்தில் தேன் என்ற இனிய சொல் அதிகம் வருகின்றது,

'சிறந்த அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்' என்றார் சிவபுராணத்தில். 'தேனமர்சோலை திருவாரூரில் ஞானந்தன்னை நல்கிய நன்மையும்' என்றார் கீர்த்தித்திருவகவில். 'குடம்பை கொண்டு இன்தேன் பயத்தி' என்றார் திருவண்டப்பகுதியில்.

'இன்ன தென்றறியாத தேனே' என்றார் திருச்சதகத்தில்.

மேலும் 'வந்திக்கு ஆட்கொண்டதேனே' 'தேனே அமுதே கரும்பின் தெளிவே' 'நந்தாத்தேனைப் பழச் சுவையை' 'தேனுந்து சேவடிக்கே' அனைத் தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்' தேனாயின்னமுதாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்' இவ்வாறு பல இடங்களில் தேன் என்ற இனிய சொல் பயில்கின்றது.

### ஐந்தெழுத்தின் விளக்கம்

திருவாசகம் 'நமச்சிவாய வாழ்க' என்று தொடங்கி ''அம்மை எனக்கருளிய வாறு'' என்று முடிகிறது. திருப்பெருந்துறை தொடக்கம் சிதம்பரம் வரை திருவாசகம், மணி வாசகர் பெருமானின் திருவாயிலிருந்து வெளிவந்துள்ளது. சிதம்பரத்திலே அவர் பாடிய பாடல்கள் அதிகம்.

அம்பலவாணர் ஆடிக்கொண்டே இருப்பவர். அவருடைய நடனமே ஐந்தெழுத்தின் விளக்கம். திருவாசகம் ஐந்தெழுத்தின் விளக்கமாக அமைந்துள்ளது. இதனாற்றான் திருவாசகத்தின் பொருளைக் கேட்ட போது தில்லையம்பலவனைச் சுட்டிக்காட்டி மறைந்தார் மாணிக்கவாசகர்.

இறைவனிடம் நாம் குறைகளுக்கு மன்னிப்புப் பெற அழவேண்டும். அழுது அழுது தான் திருவடிப்பேற்றைப் பெற முடியும் என்பதை வலியுறுத்துவது திருவாசகமென்னும் தேன்.

ஆகவே அன்பர்கள் அனைவரும் இம்மையில் எம்மைச் சூழ்ந்துள்ள துன்பங்கள் அகலவும், மறுமையில் பேரின்பப் பெருவாழ்வு பெறவும் திருவாசகத் தேனை நாடோறும் பருகி உருகி அவனருள்பெற்று உய்வோமாகுக.

★

சமூகஜோதி
**கா. கணேசதாசன்**

# விரைவில் ஆளும் தரப்பில் இருப்பேன் என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஜூன் 25
'விரைவில் ஆளும் தரப்பில் இருப்பேன்' என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

என்னை அமைச்சரவையில் இருந்து ஜனாதிபதி விலக்கியதன் மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மட்டும் அல்ல முஸ்லிம் சமூகத்தையே அவமதித்துவிட்டார்.

நாடாளுமன்றத்தில் சில அடி தூரத்துக்குச் சென்றுள்ளேன். விரைவில் ஆளும் தரப்பில் இருப்பேன் — என்றார்.

(ம-3)

# தந்தை செல்வா விவரணப் படம் தயாரிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25
தந்தை செல்வா நினைவு நூல் தொகுதியையும், அவரது வாழ்க்கை பற்றிய விவரணப் படத்தையும் வெளியிடுவதற்கான ஆரம்பப் பணிகள் தந்தை செல்வா அறங்காவலர் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி கேட்போர் கூடத்தில் அறங்காவலர் குழுத் தலைவர் பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற அறங்காவலர் குழுக் கூட்டத்தில் இவ் விவரம் தெரிவிக்கப்பட்டது.

விவரணப்படம் தயாரிப்பதற்காகக் கொழும்பில் திரைப்படத்துறையில் ஈடுபட்டுள்ளோரின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறப் பேராயர் எஸ். ஜெபநேசன் அடிகளார் தலைமையில் குழு ஒன்று கொழும்பு செல்லவுள்ளது.

தந்தை செல்வா நினைவு நூல் தொகுதியை வெளியிடுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டுள்ளதாக நூலாசிரியரான பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் தெரிவித்தார்,

(ம-173)

## கைக்கடிகாரம் யாருடையது?

யாழ்ப்பாணம், ஜூன் 25
திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் (மருத்துவபீடத்துக்கு முன்னால்) கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு நல்லூர் பிரதேச சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

(க-4)

### 'அக்ரஹாரா' காப்புறுதித் திட்டம்:

# ஆசிரியர் மூக்குக்கண்ணாடி கட்டணத்தைப் பெற திணறல்

யாழ்ப்பாணம், ஜூன் 25
அக்ரஹாரா என அழைக்கப்படும் ஆசிரியர்களுக்கான காப்புறுதித்திட்டத்தின் கீழ் சேர்ந்து காப்புறுதி செய்து கொண்டுள்ள பல ஆசிரியர்கள் இத் திட்டத்தின் மூலம் தமது மூக்குக்கண்ணாடி வாங்கியதற்கான கட்டணத் தொகையை மீளப்பெற முடியாது திணறுகின்றனர்.

மூக்குக்கண்ணாடிகளைப் பெறுவதற்கு சிபார்சு செய்த டாக்டருடைய கையெழுத்து வித்தியாசப்படுவதாகக் காரணம் காட்டி பல ஆசிரியர்களுக்கு அவர்களின் விண்ணப்பங்களை நிராகரித்து திருப்பி அனுப்பி வைத்துள்ளது காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.

அக்ரஹாரா காப்புறுதித் திட்டத்தின் கீழ் பல நன்மைகள் தமக்குக் கிடைக்கும் என நம்பி இருந்த ஆசிரியர்களுக்கு காப்புறுதித் திட்டத்தில் நம்பிக்கையீனத்தையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஆசிரியர்கள் தமது கண் பார்வையைப் பரிசோதித்து மூக்குக்கண்ணாடிகளை பெற்றுக்கொள்வதற்கு இரண்டாயிரம் ரூபா வரை காப்புறுதி ஸ்தாபனத்திடம் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆசிரியர்கள் கண்ணாடிகளைப்பெற்று அதன் பற்றுச் சீட்டுடன், வைத்தியரின் சிபார்சுக் கடிதங்கள் இரண்டையும் இணைத்துக் கல்வித் திணைக்களத்தினூடாகக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

இவர்களில் பலருக்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினர் ''டாக்டரின் கையொப்பம் வித்தியாசப்படுவதால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது'' எனக் குறிப்பிட்டுக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இச்செயல் குறித்து ஆசிரியர்கள் அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ளனர்.

(க-152)

# கரம்பன் இறங்குதுறை வீதி பாலம் அமைக்கும் பணி பூர்த்தி

வீதிஅபிவிருத்தித்திணைக்களத்தால் பல லட்சம் ரூபா செலவில்மேற்கொள்ளப்பட்டு வந்த கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறைக்கு செல்லும் வீதி புனரமைப்பு மற்றும் இறங்குதுறை பாலம் அமைக்கும் பணிகள் தற்பொழுது முடிவடையும் நிலையில் உள்ளன,

இறங்குதுறை வரைக்கும் வாகனங்கள் வந்து திரும்பக் கூடியவாறு இதற்கான வீதி அகலமாக்கப்பட்டு வருகிறது.

20 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வந்த மேற்படி இறங்குதுறை பாலம் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளதை அடுத்து தற்பொழுது பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பனை மரத்தால் அமைக்கப்பட்ட பாலத்தையே பொது மக்கள் பயன்படுத்தி வந்தனர்.

ஊர்காவற்றுறை துறைமுகம் ஊடாக தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்துக்கு கடற்படையினர் தடை விதித்துள்ளதை அடுத்து தற்போது மேற்படி இறங்குதுறையூடாகவே தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

## உதயன்

### பாடநூல் விநியோகத்தில் கிடைத்த பாடம்

அடுத்த ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய இலவசப் பாடநூல்களை இந்த வருட முடிவிலேயே சம்பந்தப்பட்ட கல்வி வலயங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சின் வெளியீட்டுப் பிரிவு அலுவலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

வரவேற்கத்தக்க - பெற்றோர்கள், மாணவர்கள் வயிற்றில் பால் வார்க்கின்ற - தகவல் இது.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது இலவசப் பாடநூல் விநியோகத்தில் அதிகம் பாதிக்கப்படுவது வடக்கு மாகாணமே. கடந்தகால அனுபவங்கள் அதைத்தான் கூறுகின்றன.

தமிழ் மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்களை அச்சிடுவதில் தாமதம். தவிரவும், எழுத்து மற்றும் கருத்துகளில் பல குளறுபடிகள். இவ்வளவு சிக்கல்களையும் தாண்டி, நூல்கள் விநியோகத்துக்குக் கிடைத்தாலும் 'ஆசாரி இடங்கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுக்காத கதை' போன்று அந்த நூல்கள் மாணவர்களைச் சென்றடைவதில் குழப்பங்கள் செய்து - தாமதங்களை உருவாக்கும் - நமது அதிகாரிகள் வேறு.

கடந்த ஆண்டு பல முக்கியமான பாடங்களுக்குரிய நூல்கள் நமது மாணவர்களுக்கு இரண்டாம் தவணை முடிவடைந்த பின்னரே கிடைத்தன.

இந்தத் தாமதத்தால் வெகுண்டெழுந்த பெற்றோர் ஒருவர், மாணவருக்கு எதிரான இந்த அநீதியை ஆட்சேபித்து அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக சட்டமா அதிபருக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பும் அளவுக்கு நிலைமை போனது.

இந்த வருடத்தில் முதல் பாதியிலேயே பெரும்பாலான நூல்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டன. ஆனால் அதிகாரிகளின் குளறுபடிகளால் பல மாணவர்களுக்கு நூல்கள் 'கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத' நிலை.

ஓரிடத்துக்கு - ஒரு வலயத்துக்கு - தேவையான - பற்றாக்குறையான - பாடநூல்கள், பிறிதொரு இடத்தில் - மற்றொரு வலயத்தில் - அளவுக்கு அதிகமாக, மிதமிஞ்சித் தேங்கிக் கிடக்கும் நிலைமை. இதற்கு யார் காரணம்? என்ன நடவடிக்கை எடுத்தார்கள் மேலதிகாரிகள்?

தங்களுக்குப் பிடிக்காத அதிகாரிகளுக்கு 'வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்' என்ற மாதிரி எடுத்ததெல்லாவற்றுக்கும் விளக்கங்கள், வியாக்கியானங்கள் கேட்டு, விசாரணைகள் நடத்தும் மேலதிகாரிகள் இது விடயத்தில் மௌனம் சாதிப்பது தங்கள் குட்டு அம்பலமாகிவிடும் என்ற காரணத்தினாலா? இத்தகைய பொது விடயத்தில் உண்மையைப் பகிரங்கப்படுத்துவது தங்கள் உத்தியோக ரீதியான பொறுப்பு என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்வது நல்லது.

சில மூத்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தத் தவறுகளைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள்; நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியிருக்கின்றார்கள். ஆனால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அமைச்சின் உயர் அதிகாரிகளை - அரசியல்வாதிகளை - திருப்திப்படுத்துவதற்காக, உரிய நூல்களை யாழ்ப்பாணத்தில் கொண்டுபோய் கொட்டிவிட்டோம் என்று அவர்களுக்குக் காட்டுவதற்காக, நடவடிக்கை எடுப்பதிலும் பார்க்க, உரிய மாணவர்களுக்கு, உரிய காலத்தில், உரிய புத்தகங்களைக் கிடைக்கச்செய்வதுதான் தமது பணி - கடமை - என்பதை சம்பந்தப்பட்ட இடைநிலை அதிகாரிகள் உணரவேண்டும்.

அடுத்த வருடத்துக்குரிய புத்தகங்களை நேரத்தோடு வழங்கும் திட்டத்தை மத்திய அரசின் கல்வி அமைச்சு உரிய முறையில் செயற்படுத்தினால், தாமதமின்றி அவற்றை நமது மாணவர்களுக்கு விநியோகிக்கும் செயற்பாட்டை - முன்னைய காலங்களில் ஏற்பட்டவை போன்ற தவறுகள் இடம்பெறாமல் - மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும்.

### பேச்சு முயற்சிகளைத் தடுப்பதற்காக

# மூன்று சிங்கள அமைப்புகள் ஓரணியில் இணைந்தன!

கொழும்பு,ஜூன்25

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்கக் கூடாது; அவர்களுடன் எக்காலத்திலும் பேச்சு நடத்தக் கூடாது என்பதை வலியுறுத்தி அழுத்தம் கொடுப்பதற்காக மூன்று சிங்கள அமைப்புகள் ஒன்றிணைந்து ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளன.

சிஹல உறுமயக் கட்சி, சிங்கள தேசிய சங்கம், பூமி புத்திரக் கட்சி ஆகியனவே ஒன்றிணைந்து புதிய ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்துள்ளன. இந்த ஒருங்கிணைப்புக் குழு அரசமைப்பினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதைத் தடுப்பதற்கும் நாடு துண்டாடப்படுவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதுடன் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்பதற்கும் அழுத்தம் கொடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை கண்டிக்கு விஜயம் செய்து அஸ்கிரிய, மல்வத்த பீட மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளனர். (ஐ)

### வலிப்புநோய் மருந்து தட்டுப்பாடு

தென்மராட்சி,ஜூன்25

மந்திகை ஆஸ்பத்திரியில் வலிப்பு நோய்க்கு மாற்றாகப் பயன்படுத்தும் மருந்துகள் முடிவடைந்துள்ளதால் நோயாளர்கள் இந்த மருந்துகளைத் தனியார் மருந்துக் கடைகளில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காபமசப்பின், டயலன்ரின் சோடியம், எப்பிலிம் ஆகிய மருந்துகளே ஆஸ்பத்திரியில் கையிருப்பில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இரத்தஅழுத்த நோய்க்குப் பயன்படுத்தும் அல்டோமற் என்னும் மாத்திரையும் கையிருப்பில் இல்லை எனவும் -

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அண்மையில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்ட மருந்துத் தொகுதிகளில் இம் மருந்துகள் வழங்கப்படவில்லை எனவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# ஜானகவின் நியமனம் பற்றி ஆஸி. நாடாளுமன்றில் கேள்வி

மெல்பேர்ண்,ஜூன்25

ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதராக முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப்பட்ட விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

பிரேரெடன் என்னும் உறுப்பினர் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதத்தில் வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டௌணர் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை விடுத்தார்.

முன்னாள் இராணுவ அதிகாரியின் நியமனம் பெறுமதியானதும் பொருத்தமானதும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எனக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார் என்று அந்த அறிக்கையில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இராணுவக் கட்டளை அதிகாரியாகக் கடமையாற்றியபோது இலங்கையின் பல பகுதிகளிலும் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து உங்களின் அல்லது தலைமையகத்தினால் விளக்கங்கள் தரப்பட்டன. இந்த இராஜதந்திர நியமனம் தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சரால் தங்களுக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழியின் தெளிவான தன்மை என்னவென்று அலெக்ஸாண்டர் டௌணரிடம் பிரேரெடன் எம்.பி. கிளப்பியிருந்தார்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் நியமனத்தை ஆட்சேபித்து தனக்குப் பல கடிதங்கள் கிடைக்கப் பெற்றதை ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அச்சமயம் ஒப்புக்கொண்டார். (ஐ)

## நாட்டு நடப்பு

இலுப்பையடிச் சந்தி நின்று
இழிச்சவாய் இயமனே நீ
அலுப்பதை உதயனுக்கு
அளித்திடல் முறையோ சொல்லு?
நற்றமிழ் நந்தகுமாரன் தன்னை
நலம்பெறு கானமயிலனாரை
சற்றேனும் இரக்கமின்றி
சாடினாய் முறையோ சொல்லு?

- விகடகவி -

### சன நெரிசலைத் தவிர்ப்பதற்கு

# நெல்லியடி சந்தை விரைவில் புதிய இடத்துக்கு மாறும்

நெல்லியடிப் பட்டினத்தில் ஏற்பட்டுள்ள இட, சனநெருக்கடிகளை நீக்கும் பொருட்டு நெல்லியடிப் பொதுச் சந்தை புதிய இடத்துக்கு விரைவில் மாற்றப்படவுள்ளது.

பொலீஸ் நிலையத்துக்கு அண்மித்ததாக, யாழ்ப்பாணம் வீதியில் வடபுறத்தில் உள்ள சிதம்பரம் ஆலயத்துக்குச் சொந்தமான காணியிலேயே புதிதாகப் பொதுச்சந்தை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென சிதம்பர ஆலயக் காணிகளை பராமரித்துவரும் வேதாரணியேஸ்வரா ஸ்ரீஆதிவாரமட சபை நிர்வாகிகளிடமிருந்து 22 பரப்புக் காணி 99 ஆண்டு கால குத்தகைக்குப் பெறப்பட்டுள்ளது.

புதிய இடத்தில் தற்போது தற்காலிகமாக மரக்கறிச்சந்தையும், இரு இறைச்சிக் கடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. விரைவில் இவை இயங்கவுள்ளன.

அதேநேரம் மீன் சந்தை தற்போது இயங்கி வரும் பொதுச்சந்தையிலேயே இருந்து வரும்.

தற்காலிக சந்தை அமைக்கப்பட்டுள்ள புதிய இடத்தில் நவீன மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, கடைத் தொகுதிகள் என்பன கட்டுவதற்கு நிதி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கரவெட்டி பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதி தெரிவித்தார். (ஐ-173)

### உழவு இயந்திர உரிமையாளர் சங்கம்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் ஏற்றும் உழவு இயந்திர உரிமையாளர் சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புலோலி பொது நூல்நிலைய மண்டபத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவராக கே.செல்வமாணிக்கம் தெரிவு செய்யப்பட்டார். (ஐ-173)

# பெண்களின் முன்னேற்றத்துக்கு திருமணம் பெரும் தடையாகிறது

### கருத்தரங்கில் பெண் எழுத்தாளர் உரை

திருமணத்தின் பின்பு பெண்களின் முன்னேற்றம் பெரிதும் தடைப்படுகிறது. திருமணத்துக்கு முன்பு அவர்கள் பல விடயங்களிலும் இலகுவாக முன்னேற முடிகிறது. திருமணம் பெண்களுக்கு ஒரு முட்டுக்கட்டை.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச கல்வியகம், பிரெட்ரிக் ஈபேட் மன்றம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்திய 'சமுதாயத்தில் ஆண்கள் பெண்களுக்கான சமவாய்ப்பு' பற்றிய கருத்தரங்கில் உரையாற்றிய பிரபல எழுத்தாளரும மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை முகாமையாளருமான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஆண்களுக்கும்-பெண்களுக்கும் சமவாய்ப்பு வேண்டும். அதற்காக இருசாராருக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படக்கூடாது. முரண்பாடு ஏற்படாத வகையில் ஒவ்வொருவரின் மனதிலும் சமவாய்ப்பு என்ற கருத்துப் பதிய வேண்டும்.

எமது நாட்டில் போர் ஏற்படுத்திய சாதகமான விளைவுகளில் ஒன்று பெண்கள் எல்லோரும் சைக்கிளில் செல்வதற்குக் கற்றுக்கொண்டது. பெண்களுக்கான சில குணாதிசயங்கள் இன்னும் மாறாதவையாக உள்ளன. பெண் ஆசிரியர்கள் புடவை, நகை பற்றியெல்லாம் கதைப்பதை விடுத்து மாணவ, மாணவிகளின் செயற்பாடுகள், கல்வி வளர்ச்சி பற்றிக் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சில நிறுவனங்களில் பெண்கள் தலைமைப் பதவிகளை வகிப்பதற்குத் தடைகள் பல உள்ளன. அதற்காகச் சொல்லப்படுகின்ற காரணங்கள் வேறு; நிஜம் வேறு. ஆண்கள்தான் தலைமைப்பதவி வகிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இவற்றை ஆய்வுகள் மூலம் அறிந்துகொள்ளலாம் - என்று தெரிவித்தார்.

நிகழ்வில் சிறப்புரையாற்றிய வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தமதுரையில்:-

பெண்கள் ஆண்களைவிட ஏதோ ஒரு விதத்தில் குறைந்தவர்களாகவே கருதப்படுகிறார்கள். அதற்காக ஆண்களுக்கு எதிராக நாங்கள் போர்க்கொடி தூக்கப்போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தனதுரையில் தெரிவித்ததாவது:-

பெண்கள் எல்லோரும் திறமைசாலிகள்தான். எந்தக் கெட்ட குணங்கள் உள்ள ஒருவனையும் அவனது மனைவியால் திருத்தமுடியும். பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். கணவன் இரங்கமாட்டானா? அப்படித் திருத்த முடியாவிட்டால் அந்தப் பெண்களுக்கு ஆளுமை போதாது என்றுதான் சொல்ல வேண்டும்.

கல்வியில் பெண்களுக்குச் சமவாய்ப்புக் கிடைத்தாலும் பதவியுயர்வுகள் கிடைப்பதில் தடைகள் உண்டு. அதற்கு எதிராகப் போராடி ஜெயிக்க வேண்டும் - என்றார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிதிச் செயலாளர் ச.தர்மராஜன் தனதுரையில் தெரிவித்ததாவது:-

ஆசிரியத் தொழிலில் உள்ளவர்களில் 80 வீதமானவர்கள் பெண்களேயாவர். அவர்கள் சோர்வடையாதவர்கள். எந்த நேரத்திலும் எந்த வேலையையும் செய்யக்கூடியவர்கள் என்று குறிப்பிட்டார்.

நிகழ்வில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி ச.ஜெயராஜா, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோரும் உரையாற்றினர். (ம-10)

## நாளை

ஆனி 12
செவ்வாய்க்கிழமை
திதி: பஞ்சமி
காலை 7.02 வரை
ஷஷ்டி
பின் இரவு 4.38 வரை
நட்சத்திரம் : மகம்
முற்பகல் 11.47 வரை
குமாரஷஷ்டி விரதம்
சுபநேரம் : 10.25 - 11.55
ராகுகாலம் : 2.55 - 4.25
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பயனுள்ள முயற்சிகளின் இரகசியம் நம்பிக்கையில் இருக்கிறது.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



உன்னை யார் செய்தார்?
அழகான உருண்டை,
எடுத்து விளையாடியபோது
வெடித்துச் சிதறியது
நீ மட்டுமல்ல,
இளஞ்சமுதாயமும்தான்.

# மாவட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் மாணவர்களது நலன்கள் புறக்கணிப்பு

## குற்றஞ்சாட்டுகிறார் அதிபர் சங்கத் தலைவர்

யாழ்ப்பாணம்,ஜூன்25

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைக ளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட் டிகள் வெறும் ஒப்பாசாரத்திற்காக - நடத்தி முடிக்கப்படவேண்டும் என் பதற்காக - நடத்தப்படுகின்றன. இவற் றில் மாணவர்களின் நலன் சிறிதும் கவனத்திலெடுக்கப்படவில்லை.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் வடமாகாண அதிபர்கள் சங்கத் தலை வரும், யாழ்.மத்திய கல்லூரி அதிபரு மான க.இராசதுரை.

இது குறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:-

வழமையாக தை மாதத்தின் முதல் வாரங்களிலேயே கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்படுகின்ற தமிழ்த் தினப் போட்டி தொடர்பான சுற்றறிக் கைகள் இம்முறை மிகவும் காலம் தாழ்த்தியே அனுப்பிவைக்கப்பட்டன.

கடந்த மே மாதத்தின் பின்னரே இந்த சுற்றறிக்கைகள் அனுப்பிவைக் கப்பட்டதால், மாணவர்கள் தங்களை போட்டிகளுக்கு ஆயத்தம் செய்யும் முகமாக அவர்களுக்கு உரிய கால அவகாசம் வழங்கும் விதத்தில் தேசிய மட்டப் போட்டிகள் எதிர் வரும் ஒக்ரோபர் மாதமே நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்மாவட்டத்தில் உள்ள சில அதிகாரிகள் அவசர அவசரமா கச் செயற்பட்டு போட்டிகளை நடத்தி முடித்துள்ளனர். மாணவர்கள் போட் டிகளுக்கான ஆயத்தங்களை மேற் கொள்வதற்குத் தேவையான கால அவகாசத்தை வழங்காது, போட்டி களை அவசர அவசரமாக நடத்தித் தமது கடமைகளை அவர்கள் நிறை வேற்றியிருக்கிறார்கள்.

இதற்கான பணிப்புரைகள் விடப் பட்டு ஒரு சில வாரங்களுக்குள்ளேயே இப்போட்டிகள் அனைத்தும் நடத்தி முடிக்கப்பட்டுவிட்டன. இதனால் பாதிக் கப்பட்டது முற்றிலும் மாணவர் சமுதா யமே.

அத்துடன் கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும் இடம்பெற்ற போட் டிகளில் அனுபவமற்றவர்களும், துறை சாராதவர்களும் நடுவர்களாக நியமிக் கப்பட்டிருந்தனர். இதனால் தகுதி யான மாணவர்களுக்கு உரிய இடங் கள் வழங்கப்படவில்லை.

இனிவருங் காலங்களிலாவது அதி பர்களுடன் கலந்தாலோசித்து, நன்கு திட்டமிட்டு இப்போட்டிகள் நடத்தப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகா ரிகளிடம் அதிபர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 - 04 - 1936



இறப்பு 06 - 07 - 2000

### அமரர் சின்னத்தம்பி சின்னத்துரை

திதி:25.06.2001

பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்த அப்பா!
பார் புகழ் கோண்டாவிலில் பிறந்திட்டீர்!
ஊரினிலே உத்தமராய்த் திகழ்ந்து
உயர்வு பல பெற்று வாழ்ந்தீர் - அப்பா!
சிற்ப ஓவிய வல்லுநன் என்று
பட்டங்கள் பல பெற்று இந்தப்
பாரினிலே பெருமை கண்டீர்! அப்பா!!
காலங்கள் மகிழ்ச்சியில் உருண்டோடுகையில்
காலன் உம்மை கேட்டு மகிழ்ந்ததேனோ?

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

(89234)

## நெஞ்சை விட்டகலா மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 10 - 05 - 1924



விண்ணில் 29 - 06 - 1998

### அமரர் கந்தையா ஐயாத்துரை

திதி: 25-06-2001

*ஆண்டுகள் மூன்று சென்றாலும் - எம்*
*நினைவில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும்*
*அன்புத் தெய்வமே!*
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

- அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
மைத்துனன்.

*பிடாரிஅம்மன் கோயிலடி,*
*ஆனைக்கோட்டை.*

(89324)

## விழிப்புணர்வு தெருக்கூத்துகள்

வடமராட்சிப் பகுதியில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் மக் கள் கூடும் இடங்களில் சமூக விழிப் புணர்வுத் தெருக்கூத்துகள் இடம் பெற்றுவருகின்றன.

கசிப்பு, பாலியல் வல்லுறவு, இள வயதில் திருமணம் போன்ற பிரச்சி னைகளால் சமூகத்தில் ஏற்பட்டுவரும் தாக்கங்கள் குறித்து தெருக்கூத்து களில் சொல்லப்படுகின்றன.

அண்மையில் நியமனம் பெற்ற பருத்தித்துறை, கரவெட்டி, தென் மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அபிவிருத்தித் தொண்டர்களே இத்தெருக்கூத்துகளை நடத்தி வரு கின்றனர். (ம-117)

## திருக்குறள் மனனப் போட்டி

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல் லூரி நிறுவுநர் மழவராயர் கந்தையா நினைவாக திருக்குறள் வினாடி வினாப் போட்டி ஒன்று நடத்தப்பட வுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாண வர்கள் இடையே மாவட்ட மட்டத் தில் நடைபெறவிருக்கும் இப்போட்டி களுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. பாடசாலைகளிலிருந்து மூன்று மாணவர்கள் கொண்ட குழு போட்டியில் கலந்துகொள்ளலாம்.

வினாடி வினாப் போட்டிகளுக் கான ஏற்பாடுகளை ஸ்ரீ சோமஸ் கந்தர் கல்லூரி தர்மகர்த்தா சபை செய்துள்ளது. (ம-15)

## மாணிக்கவாசகர் குருபூசை

அரியாலை,ஜூன்25

உடுவில் மான்ஸ் மகாவித்தி யாலய இந்து மாணவர் மன்றத்தின் சார்பில் வித்தியாலய மண்டபத்தில் மாணிக்கவாசகர் சுவாமிகள் குரு பூசை இன்று காலை 9 மணியள வில் நடைபெறவுள்ளது.

சமூகஜோதி கா.கணேசதாசன் அவர்கள் 'திருவாசகத்தின் மகிமை' என்ற தலைப்பில் சிறப்புரையாற்று வார்.

மாணவர்களது கூட்டுவழிபாடு, திருவாசகம் ஓதல் போன்ற நிகழ்வு களும் நடைபெறவுள்ளது. (ம-17)

# அங்கவீனர்களுக்கான வீடமைப்புத் திட்டம்

## சமூக சேவைகள் அமைச்சு ஏற்பாடு

வலி.வடக்கு,ஜூன்25

அங்கவீனர்களுக்கான வீடமைப் புத் திட்டம் ஒன்றை சமூக சேவை கள் அமைச்சு செயற்படுத்தவுள்ளது.

இதற்கான பயனாளிகளின் விவ ரங்களைப் பெற்று அனுப்பிவைக்கும் படி சகல பிரதேச செயலகங்களும் கேட்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சொந்தக் காணி உடைய அங்கவீ னர்களுக்கே இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது. இதற்கான பயனாளிகள் கிராம அலு வலர்கள் மற்றும் சமூக சேவை உத்தி யோகத்தர்களால் தெரிவு செய்யப் பட்டு வருகின்றனர். (ம-86)

# பூசைகள் மீண்டும் ஆரம்பம்

சுன்னாகம்,ஜூன்25

தென்மராட்சியில் நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் மீண்டும் பூஜைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

பலத்த சேதமடைந்த இவ்வால யத்தின் இடிபாடுகள் சிரமதானம் மூலம் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு விசேட பொங்கல் பூஜை நடைபெற் ற்து. தற்போது நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

(ம-27)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**எமது வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் வடிசாலையை அபிவிருத்தி செய்வதற் கும், உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான நிதி வளத்தை ஈட்டக்கூடிய வகையில் இவ்வருடம் மதுவரி விலக்குப் பெற்றுத் தந்தமைக்காக**

**மாண்புமிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
(வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகார அமைச்சர்) அவர்களையும்

வரிவிலக்களிப்புப் பெறுவதற்காக கௌரவ அமைச்சர் அவர்களுக்குத் தூண்டுகோலாக இருந்த

**உயர்திரு.மு.பாக்கியநாதன்**
(தலைவர், பனை அபிவிருத்திச் சபை) அவர்களையும்,
**உயர்திரு.வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்**
(தலைவர், வலி.தென்மேற்கு பிரதேச சபை) அவர்களையும
**உயர்திரு. நா.திரிலோகநாதன்**
(தலைவர், வலி.மேற்கு பிரதேச சபை) அவர்களையும்
**பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

*- பணிப்பாளர்கள், பணியாளர்கள்.*

1. வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.
2. சங்கானை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
3. தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
4. சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
5. மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
6. பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
7. கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

(C/17192)



ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நம.

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷ" வருடம் ஆனிமாதம் 13ஆம் நாள்(27-06-2001) புதன்கிழமை முற்பகல் 10-17 மணி முதல் 11-18 மணி வரை வரும் சிங்க லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

**எமது புத்திரன்**
**திருநிறை செல்வன்**
**சிறீ ரஞ்சன்(ரஞ்சன்)**
**அவர்களுக்கும்**



**எமது புத்திரி**
**திருநிறை செல்வி**
**சுஜீந்தினி(பபிலா)**
**அவர்களுக்கும்**

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார்கோயில்) ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் 28-06-2001 வியாழக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

**தங்கள் நல்வரவை நாடும்:**

**திருமதி சுந்தரலிங்கம் பஞ்சரதம்**
(சின்னமணி பத்தர்)
*காரைக்காடுவீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

***வரவேற்பாளர்கள்:-***
***மைத்துனர்கள்:-***
சு.நாகராசா தம்பதிகள்
வ.சண்முகராசா தம்பதிகள்
செ.சகாயராசா தம்பதிகள்
செ.ரவீந்திரன் தம்பதிகள் (ரொபி)

**திரு. திருமதி பஞ்சாட்சரம் சாந்தலட்சுமி**
*நாவற்குழி கிழக்கு, கேரதீவு வீதி.*
தற்காலிக முகவரி:-
*பழைய தபாற்கந்தோர் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

***வரவேற்பாளர்கள்:-***
***மருமக்கள்:-***
ச.சிறீதரன் தம்பதிகள்
க.மகேஸ்வரன் தம்பதிகள்

(இருவீட்டார் அழைப்பு)

(89271)

# நாட்டுக்கூத்து மரபைக் காக்க இளைய தலைமுறை முன்வரட்டும்

நாட்டுக்கூத்து மரபை அழிய விடாது பாதுகாக்கவேண்டும் என்ற சிந்தனையுடன் இளம் கலைஞர் சமூகம் ஒன்று யாழ்.குடாநாட்டில் உருவாகிவருகிறது.

எனினும் குடாநாட்டில் தொடரும் யுத்த சூழல், இடப்பெயர்வுகள், அமைதி குறித்த நிச்சயமற்ற நிலை

> பல்துறைக் கலைஞரான அண்ணாவியார் அல்பிரட் நாடறிந்த பெருங்கலைஞன். அவரது நெறியாள்கையில் மலர்ந்த நாட்டு கூத்துக்கள், இசைநாடகங்கள் இதற்குச் சான்று.
>
> **- இசை நாடகக் கலைஞர் செல்லையா மெற்றாஸ்மயில்**

என்பன இந்த வளரும் கலைஞர்களின் பாதையில் பல்வேறு தடஙகல்களை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறு தனது மனக்குமுறலை வெளிப்படுத்தியிருக்கிறார் மூத்த நாட்டுக்கூத்துக் கலைஞர் பாசையூர் அண்ணாவியார் வஸ்தியாம்பிள்ளை ஜேகப் (அல்பிரட்).

நாட்டுக்கூத்து என்றால் அது குடாநாட்டின் கரையோரப் பகுதிக்குரிய தனித்துவமான ஒரு கலை வடிவம் என்பது யாழ்ப்பாணத்தின் மூத்த நாட்டுக்கூத்துக் கலைஞர்களின் கருத்து. இத்தகைய பெருமைமிக்க கரையோரப் பகுதிக் கிராமங்களில் ஒன்றான பாசையூருக்கு 'கலைச்சுடர்' பகுதிகளாக கலைஞர்களைச் செவ்வி காணச் சென்றேன்.

அங்கே ஒவ்வொரு வீடும் கலைஞர்கள் வீடுதான் என்று கூறக்கூடிய அளவுக்கு அண்ணாவிமார்களும் இசை ஆர்வலர்களும் அங்கு நிறைந்து காணப்பட்டனர்.

அவர்களில் ஒருவரே இன்றைய 'கலைச் சுடர்' நாயகன் வ.ஜேக்கப் (வயது 61). அண்ணாவியார் அல்பிரட் என்று அழைத்தாலே கலையுகம் இவரை அறியும்.

அண்ணாவியார் அல்பிரட்டுடனான செவ்வியின் முழு விவரமும் வருமாறு:-

பாஷையூர் கலை வளரும் திருநாடு. புனித அந்தோனியாரின் அருளாட்சி தினமும் கிடைக்கும் பெரும் பூமி. இத்தகைய பெருமைமிக்க - அழகிய கடற்கரை கொண்ட ஊரில் ஞானப்பு வஸ்தியாம்பிள்ளை என்பவருக்கு 1939ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி இவர் புதல்வனாகப் பிறந்தார்.

இளமையிலேயே நாட்டுக்கூத்துக் கலையில் ஆர்வம் மிக்கவராக விளங்கிய அல்பிரட் தனது 13ஆவது வயதில் 'புனிதவதி' நாட்டுக்கூத்து மூலம் கலையுலகுக்கு அறிமுகமானார்.

தொடர்ந்து மிருதங்கம், இசை நாடகம், நாடகம், நாட்டுக்கூத்து மூலம் இவர் கலையுலகுக்குத் தன்னை அர்ப்பணிக்கத் துணிந்தார்.

இதன் பலனாகக் 'கண்டியரசன்' நாட்டுக்கூத்தில் கண்டியரசனாகப் பாத்திரமேற்று சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மேடைகளிலே தோன்றும் வாய்ப்பை இவர் பெற்றுக்கொண்டார்.

நாட்டுக்கூத்துக் கலைஞன் ஒருவனுக்கு நிறைந்த குரல்வளம் வேண்டும் எனக்கூறும் அல்பிரட் நாட்டுக்கூத்தில் ஆறுரைக் கட்டை சுருதியில் வீரம, காதல் செறிந்த பாடலகளைப் பாடக்கூடிய குரல்வளம் கொண்டவர்.

'அன்றைய காலத்தில் ஒலிபெருக்கி வசதிகள் இல்லை. இதனால் நாட்டுக்கூத்து அண்ணாவிமார்கள் கூத்துக்குக் கலைஞர்களைத் தெரிவு செய்யும் போது குரல்வளம் உடைய கலைஞர்களையே தெரிவு செய்வர்"

"இவ்வாறாகத் தெரிவு செய்யப்படும் கலைஞர்கள் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றிலில கொட்டகைகள் அமைத்து நாட்டுக்



நாட்டுக்கூத்துக் கலைஞர் "தேசிய கலைவேந்தன்" அண்ணாவியார் வ.ஜேக்கப் (அல்பிரட்)

கூத்துக்களில் நடிப்பர். இந்தக் கலைஞர்களின் குரல்வளம் ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், கொழும்புத்துறை எனப் பல இடங்களிலும் கணீர், கணீர் என ஒலிக்கும்".

இவ்வாறு கூறினார் அண்ணாவியார் வ.அல்பிரட்.

*சந்திப்பு:* **ஆனந்தன்**

பாசையூர் உதயதாரகை நாடக மன்றம், பாசையூர் நடன நல்லிசை நாட்டுக் கூத்து மன்றம், பாசையூர் அருள் நாடகமன்றம் போன்ற மன்றங்கள் மூலம் அண்ணாவியார் அல்பிரட்டின் கலை ஆர்வம் வெளிப்படுத்தப்பட்டது. இந்த மன்றங்களில் இணைந்து கொண்ட இளம் கலைஞர்கள் பலர் அங்கு அண்ணாவியார் அல்பிரட் மூலம் நாட்டுக்கூத்துக் கலையைக் கற்றுக் கொண்டனர்.

## அண்ணாவியார் ஜேக்கப் செவ்வி

இவர் நாட்டுக்கூத்துக் கலைஞராக விளங்கியதுடன் நின்றுவிடாது. அண்ணாவியாராக இருந்து நாடகங்களையும், நாட்டுக்கூத்துக்களையும் நெறியாள்கை செய்து மேடையேற்றியும் உள்ளார்.

புனிதவதி, ஞானசவுந்தரி, கிளியோபெற்றா, வீரபாண்டிய கட்டப்பொம்மன், சஞ்சுவான், பண்டாரவன்னியன், பிரான்சிஸ் அசிசியார், கண்டியரசன், எஸ்தாக்கியார், படைவெட்டு, சங்கிலியன், கனகசபை, பந்தபாசம், சஞ்சுவான், அருளானந்தம், பத்திரிசியார் என்பன அண்ணாவியார் அல்பிரட்டின் கைவண்ணங்கள்.

நாடகம், மிருதங்கம், நாட்டுக்கூத்து முதலிய பல்துறைகளில் சிறந்து விளங்கிய அண்ணாவியாரின் கலைத்திறமையை இலங்கைத் தீவின் சகல பகுதி மக்களும் அறிந்திருப்பர். காரணம் இவர் நடித்த, நெறியாள்கை செய்த பல நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் கொழும்பு, கண்டி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல தடவைகள் மேடையேறியுள்ளன.

அண்ணாவியார் அல்பிரட் யாழ். திருமறைக் கலாமன்றம், பாரம்பரியக கலைகள் மேம்பாட்டுக்கழகம் மற்றும யாழ்.மாவட்டப் பாடசாலைகள் மூலமாகத் தற்போதும் தனது கலைத்திறமையை வெளிப்படுத்தி வருகின்றார். யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பலர் அண்ணாவியாரைத் தேடிச் சென்று அவரிடம் நாட்டுக்கூத்து மரபைக் கற்று வருகின்றனர்.

அண்ணாவியார் அல்பிரட்டின் குறிப்பிடத்தக்க மாணவர்கள் என்ற வகையில் செல்லக்குமாரன் வீரன், யோசப் டினேஸ், விஜயன் மதிவதனா, அழகேந்திரன் ஜெரோமினா, பொடியப்பு சுதா ஆகியோரைக் குறிப்பிடுகின்றனர்.

"அண்மைக்காலமாக நாட்டுக்கூத்துக்களில் இசையைக் கலந்து அவற்றை அழகுபடுத்தும் வகையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனை நான் வரவேற்கின்றேன்"- இவ்வாறு கூறும் அண்ணாவியார் புதுமையை வரவேறகும் சுவைஞரும் கூட.

'குடாநாட்டிலே சுமுகநிலை திரும்பினால் ஒவ்வொரு தேவாலயத்தின் பெருநாள்களிலும் நாட்டுக்கூத்துக்கள் மேடையேறும்' என்பதும் அண்ணாவியார் அல்பிரட்டின் வாசகங்களில் ஒன்று.

அண்ணாவியார் அல்பிரட்டுடன் நாட்டுக் கூத்துக்களில் பங்குகொண்ட சக நடிகர்களில் ஈச்சமோட்டை அண்ணாவியார் பூந்தான் யோசேப், குருநகர் அண்ணாவியார் பக்கிரி சின்னத்துரை, நாவாந்துறை அண்ணாவியார் வில்சன் டி போல், அண்ணாவியார் போயிட்டி மனோகரன், இளவாலை இராசத்தம்பி, சில்லையூர் செல்வராஜா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.



"வீரபாண்டிய கட்டப் பொம்மன்" நாடகத்தில் கட்டப்பொம்மனாக எழிலிசைவேந்தன் அண்ணாவியார் அல்பிரட்.

அண்ணாவியார் அல்பிரட்டின் கலைத்திறமையைப் பாராட்டி யாழ். முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை இவருக்கு 'தேசியக்கலை வேந்தன்' என்ற பட்டம் சூட்டிக கௌரவித்தார்.

1977ஆம் ஆண்டு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் தேவாலய முன்றிலில் வண.குலாஸ் அடிகள் அண்ணாவியார் அல்பிரட்டுக்கு 'நாடக மன்னர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

1990ஆம் ஆண்டு ஈச்சமோட்டை சனசமூக நிலைய முன்றிலில் யாழ். பரியோவான் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் வே.யுகபாலசிங்கம் இவருக்கு 'எழிலிசை மன்னன்' என்ற பட்டத்தை வழங்கினார்.

யாழ்.திருமறைக் கலாமன்றம், பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம் ஆகியவையும் அண்ணாவியார் அல்பிரட்டுக்கு பாராட்டு வைபவங்களை நடத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ★




"கண்டியரசன்" நாட்டுக் கூத்தில் கண்டியரசனாக தேசிய கலை வேந்தன் அண்ணாவியார் அல்பிரட் தோன்றும் காட்சி.




# இசை நாடகங்களில் சுருதியும் தாளமும் தாய் தந்தை போன்றவை

> **ஈழத்தின் மூத்த இசைநாடகக் கலைஞர்களில் ஒருவரான கலைமாமணி வி.ரி.செல்வராஜா 'கலைச்சுடருக்கு' வழங்கிய செவ்வியின் முதல் பகுதி கடந்த வாரம் வெளியாகியிருந்தது. அதன் எஞ்சிய இறுதிப் பகுதி இவ்வார கலைச்சுடரில் இடம் பெறுகிறது.**

இளமைக் காலத்தில் கலைகளில் நாட்டம் கொண்ட சிலர் பின்னர் அரச உத்தியோகம் கிடைத்தவுடன் தமது கலை ஆற்றலுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும்.

அரச உத்தியோகத்தர்களாக இருந்துகொண்டு கலைகளை வளர்ப்பதில்தான் பெரும் முன்னேற்றத்தை அடையமுடியும். இதனை நான் எனது வாழ்க்கையில் அனுபவித்துள்ளேன். காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் நான் கடமையாற்றியபோது அங்கு கடமையில் இருந்த உயர் அதிகாரிகள் எனது கலை வளர்ச்சிக்கு உதவியும் ஊக்கமும் அளித்தனர். என்னுடன் இணைந்து இசை நாடகங்கள் பலவற்றில் அவர்கள் நடித்ததும் உண்டு.

இவ்வாறு கலைஞர் கலைமாமணி வி.ரி.செல்வராஜா தெரிவித்தார்.

கலாவிநோதன் அண்ணாச்சாமி ஆசிரியர், வானொலிக் கலைஞர் கே. குழந்தைவேலு, மயிலிட்டி முத்துத்தம்பி, வசாவிளான் மார்க்கண்டு, கரவெட்டி நற்குணம், பருத்தித்துறையைச் சேர்ந்த ஆட்டுக்குட்டி செல்வராஜா, பவுண் சின்னத்துரை ஆகியோர் கலைமாமணியுடன் இணைந்து பல்வேறு இசைநாடகங்களில் நடித்துள்ளனர். தற்போதும் 'சாவித்திரி' புகழ் அரியாலையூர் செல்வம், ம.பொ.தைரியநாதன், பளை இரத்தினகுமார், ச.சரவணமுத்து ஆகிய இசை நாடகக் கலைஞர்கள் கலைஞர் வி.ரி.செல்வராஜாவுடன் இணைந்து நடித்து வருகின்றனர்.

'ஒரு குடும்பத்தில் தாய் தந்தை ஆகிய இருவரும் எவ்விதம் முக்கியம் பெறுகின்றனரோ அதேபோலவே இசை நாடகத்திலும் சுருதி, தாளம் ஆகியன மிக முக்கியமானவை. ஆனால் இன்றைய கலைஞர்கள் சிலர் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இசைநாடகத்தை உருவாக்கி வருகின்றனர். இது மனவேதனைக்கு உரியதாகும்.

"கர்நாடக இசையில் ஆற்றல் மிக்கவர்கள் மட்டுமே இசைநாடகத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். இசை நாடகங்களை வளர்க்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

*சந்திப்பு:* **ஆனந்தன்**

"இசைநாடகக் கலையை மீளப் புனருத்தாரணம் செய்யும் வகையில் காங்கேசன்துறை வசந்தகான சபா மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளது. இந்த நாடக சபா மூலம் ஆற்றல் மிகுந்த கலைஞர்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்றும் கலைமாமணி வி.ரி. செல்வராஜா கூறுகிறார்.



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்திய கலைஞர் கௌரவிப்பு விழாவில் கலைமாமணி வி.ரி.செல்வராஜாவுக்கு யாழ். மத்திய கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி பாலசுந்தரம்பிள்ளை பாராட்டுப்பத்திரம் வழங்குகின்றார்.

வசந்தகான சபா மூலம் கலைஞர்களைப் பயிற்றுவித்து அரிச்சந்திர மயான காண்டம், ஞானசவுந்தரி, சத்தியவான் சாவித்திரி, பூதத்தம்பி ஆகிய இசை நாடகங்களையும் தான் மேடையேற்றியதாகப் பெருமையுடன் கூறுவார் வி.ரி.செல்வராஜா.

கலைமாமணி வி.ரி.செல்வராஜா சிறந்த விளையாட்டு வீரரும் கூட. தற்போதும் இவர் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் உப தலைவராகவும் அந்தச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் உள்ளார்.

கலைமாமணியின் பிள்ளைகளும் மிகுந்த கலையார்வம் உடையவர்கள். பெண் பிள்ளைகள் சங்கீத பூஷணங்களாக விளங்குகின்றனர். ஆண் பிள்ளைகள் இருவர் விளையாட்டு உத்தியோகத்தர்களாக விளங்குகின்றனர்.

"தற்போதைய நாடக அரங்குகளில் மரபு வழி இசை நாடகங்களு...

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 04 - 03 - 1949

உதிர்வு 26 - 05 - 2001

## அமரர் முருகேசு குணபாலசிங்கம் (குணம்)

மின்னலென நீர் மறைந்து மீளாத்துயர் எமக்குத் தந்தீரே!
ஓவென்று நாமலற ஓடி மறைந்தீரே நம் கண் முன்!
மாளாது நம்துயர் நம்முயிர் மாளுமட்டும்!
சதுர்த்தியில் சரணைடைந்தீரே சதுர்முகன் காலடியில்!
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

இன்று (25-06-2001) திங்கட்கிழமை எமது (தற்காலிக) இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்காலிக முகவரி:-*
க.கோபாலசிங்கம்,
*நாகம்மாள் கோயிலடி,*
*அராலி மத்தி - வட்டுக்கோட்டை.*

**மனைவி, பிள்ளைகள்.**
*நுணாவில் மத்தி,*
*சாவகச்சேரி.*

(89397

---

அளவெட்டி வடக்கு
ஞானவைரவர் சனசமூக நிலைய
கட்டட நிதி வளர்ச்சிக்காக
மாபெரும்

## மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம்:- கந்தரோடை மைதானம்.
காலம்:- 8-07-2001 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 1 மணி.

**பிரவேசம் 10/=**

தலைவா
நா.மகேஸ்வரன்

(89395)

---

சங்கானை ப.நோ.கூ.சங்கம் (வ.உ.)

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் 4,000 வெற்றுச்சாக்குகளும் 3,000 வெற்றுப்பைகளும் விற்பனைக்குண்டு. மீளளிப்பு வைப்பாக ரூபா 1000/= செலுத்தி சங்கத்தால் வழங்கப்படும் பத்திரத்தில் தங்கள் கூறு விலைகளைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு, 28.06.2001 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக சங்கத்தில் ஒப்படைக்கவும்.

23.06.2001

க.இரத்தினசிங்கம்
*பதில் பொது முகாமையாளர்.*

(C/17216)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேந்திரன் சகுந்தலாதேவி

மூளாயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேந்திரன் சகுந்தலாதேவி 23.6.2001 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

இவர் மகேந்திரனின் அன்பு மனைவியும் பிரவீனா, கிருத்திகா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.6.2001) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி.*
M.MAHENDERAN,
25,HEARTEN ROAD,
MITCHAM, SURREY,
CR4 2BW,
LONDON.

தகவல்:
முருகையா இராசேந்திரா
(சுட்டி)

(89398)

## இராசதுரை யோகேந்திரம் (யோகன்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும கொண்ட இராசதுரை யோகேந்திரம் அவர்கள் 21.06.2001 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் இராசதுரை-இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், தனுஜா, சுபேசினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற இரத்தின சபாபதி, சுபத்திரை ஆகியோரின் அன்பு மருமகனும், தெய்வேந்திரம், இராசேந்திரம் (மாவனல்லை), சிவனேஸ்வரி, இராசேஸ்வரி, அனுசா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரன் (கனடா), சிவனேஸ்வரன் (கொழும்பு), விக்கினேஸ்வரன் (டென்மார்க்), கலா (சுவிஸ்), ஞானேஸ்வவரி (கொழும்பு), விக்கினேஸ்வரி (கனடா), பரமேஸ்வரன், பாலச்சந்திரன், உருத்திரானந்தன், செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் இன்று (25.06.2001) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

தகவல்:-
இராசலட்சுமி
(தாய்)

(89396)

---

## ஊர்காவற்றுறை முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி

ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல முன்பள்ளி நிலையங்களையும் ஒருங்கிணைத்து பிரதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜா மேற்கொண்டு வருகிறார்.

எதிர்வரும் ஆவணிமாத முற்பகுதியில் நடைபெறவுள்ள பிரதேச மட்டத்திலான போட்டிக்கு பிரதேச சபை உபஅலுவலக ரீதியாக மாணவர்களைத் தயார்ப்படுத்துமாறு உப அலுவலகப் பொறுப்பதிகாரிகளுக்கு அவர் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளில் 4-5 வயதுக்குட்பட்ட சிறுவர்களே பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-16)

## அம்பனுக்கான பஸ்சேவை அதிகரிப்பு

வடமராட்சி,ஜுன்25

பருத்தித்துறை - அம்பன் பஸ் சேவை மேலும் ஒரு சேவையால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இச்சேவையுடன் நாளாந்தம் ஐந்து சேவைகள் பருத்தித்துறைச் சாலையினால் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஒரு வருடகாலமாக இரு சேவைகள் மாத்திரமே நடத்தப்பட்டு வந்தன.

இம்மாத தொடக்கத்திலிருந்து நான்கு சேவையாக அதிகரிக்கப்பட்டு, தற்போது கடந்த வாரத்திலிருந்து ஐந்து சேவைகள் நடத்தப்பட்டுவருகின்றன. (க-182)

## கரம்பன் துறையிலிருந்து நயினாதீவுக்குப் படகுச்சேவை

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்திற்குச் செல்லும் பயணிகளின் நலன் கருதி நீண்ட காலத்துக்குப் பின்னர் ஊர்காவற்றுறைக்கும் நயினாதீவுக்கும் இடையிலான படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து தினமும் காலை 10 மணிக்கு நயினாதீவு நோக்கி இப் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஊர்காவற்றுறை, காரைநகர், வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இலகுவாகப் பயணம செய்யக்கூடியதாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

## எழுவைதீவில் கடல்வள அபிவிருத்திப் பயிற்சிநெறி

ஊர்காவற்றுறை,ஜுன்25

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் விரைவில் கடல்வள அபிவிருத்தி தொடர்பாக இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு இது சம்பந்தமான புதிய பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருப்பதுடன் 18-40 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுவைதீவுப் பிரதேசத்தில் மேற்படி பயிற்சி நெறிக்கு சேர்ந்துகொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பத்தைத் தமது அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு ஈ.பி.டி.பிக் கட்சியின் எழுவைதீவு பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (க-16)

## இசை.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. காரணம் அங்கு குறியீட்டு நாடகங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இத்தகைய குறியீட்டு நாடகங்களை மேடையேற்றுவோர் மரபுவழி இசை நாடகங்கள் மூலம் மக்களுக்கு எதனையும் எடுத்துச் செல்லமுடியாது என்றே கூறி வருகின்றனர். ஆனால் இது முற்றிலும் தவறான கருத்தாகும்.

"இசைநாடகம் மூலம் புகட்டப்படும் கருத்துக்களை உண்மை பேசும் பண்பு, ஒழுக்கம், நேர்மை எனப் பட்டியலிட்டுக்கொண்டு செல்லலாம். சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயான காண்டம் என்பன இதற்கு சில உதாரணங்கள். சோகமான காட்சிகள் வரும்போது பார்வையாளர்கள் அழுவதையும், சுவாரஷ்யமான காட்சிகள் வரும்போது பார்வையாளர்கள் சிரிப்பதையும் இந்த இசை நாடகங்களில் காணலாம் என்றார் வி.ரி.செல்வராஜா. *(முற்றும்)*

---

# கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியில் அண்மையில் முறைசாராக் கல்விப் பிரிவின் புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அச் சமயம் இடம் பெற்ற தொடக்க விழாவில் செயற்றிட்ட அலுவலர் வே.அம்பிகை பாகன் மங்கள விளக்கேற்றும் காட்சி. கல்லூரி அதிபர் ம.குட்டித்தம்பி, போதனாசிரியர் சி.சிவகுருநாதன் மற்றும் மாணவர்கள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஒ)



யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் நா.சிவபாதசுந்தரம் மங்கள விளக்கேற்றும் போது எடுத்த படம்.

அருகில் வித்தியாலய அதிபர் ந.சிவராஜா உள்ளார். (ஒ)



உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் 'செயல் முறைகளும் தொழிலநுட்பமும்' என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற கண்காட்சியை, சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி வி.நாகேஸ்வன், அதிபர் ச.சர்வேஸ்வரன மற்றும் ஆசிரியைகள் சகிதம் கண்காட்சியைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (ஒ-152)



அண்மையில் நடைபெற்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போது எடுத்த படம். கல்லூரி அதிபர் சி.நடராஜா, திருமதி குமாரவடிவேல் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஒ)

# ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டாவிடில் வேலைநிறுத்தம்

## தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்வரும் 4ஆம் திகதி கல்வி அமைச்சருடன்இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தவுள்ள சந்திப்பில் சரியான பதில் கிடைக்காது விட்டால் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்க வேண்டிய நிலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது.

— இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் வேம்படி மகளிர் கல்லூரியில் இருநாள்கள் நடைபெற்ற 'ஆண், பெண் சமவாய்ப்பு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.

இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி செல்வி வசந்தி அரசரட்ணம் கலந்து கொண்டார்.

மகாசிவம் நேற்று அங்கு உரையாற்றும் போது மேலும் கூறியதாவது:-

ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக 30 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துக் கல்வி அமைச்சருடன் நடத்தும் இப்பேச்சுக்களில் திருப்தியான முடிவு எதுவும் கிடைக்காதுவிட்டால் அடுத்த மாதம் ஆசிரியர்கள் ஒருநாள் சுகயீன லீவுப் போராட்டத்திலும் மாத இறுதியில் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்திலும் ஈடுபடுவார்கள்.

எமது கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு முன்வரவேண்டும். தீர்வு கிடைக்காதுபோனால் எமது போராட்டம் உக்கிரமானதாக இருக்கும். இதனால் ஏற்படும் விளைவுகளை அரசு எதிர்கொள்ளவேண்டி வரும் — என்றார்.

### தீவகப் பணிப்பாளர்

தீவகக் கல்விப் பணிப்பாளர் க. விக்கினேஸ்வரன் அங்கு உரையாற்றும்போது கூறியதாவது:-

தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் ஆசிரியர் தெரிவு எமது கல்வி அபிவிருத்திக்குத் தடையாக இருக்கிறது.

தொண்டர் ஆசிரியர்கள் எனக் கூறிக்கொண்டு போராட்டம் நடத்துபவர்களுக்கு ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்படுகிறது.

எனவே ஆசிரியர் தெரிவு ஒழுங்கானதாக நடைபெறுவதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உதவ வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை இருக்கிறது ஆரம்பப் பாடசாலை ஆசிரியராகத் தெரிவு செய்யப்படுபவர்கள் வேறு துறைகளில் பயிற்சி பெறுகிறார்கள்.

எந்தவொரு பாடசாலையிலும் தேவையான எண்ணிக்கை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் இல்லை — என்று கூறினார்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளையும் அங்கு உரையாற்றினார்.

# நெருக்கடியின் மத்தியில் பணி புரியும் பத்திரிகையாளரே வெற்றி பெறுவர்

## கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
நெருக்கடிகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் கடமையாற்றும் பத்திரிகையாளர்களே பத்திரிகைத் தொழிலில் வெற்றி பெறுகின்றனர்.

— இவ்வாறு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவரும் கிழக்கிலங்கை தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் உபசெயலாளருமான இரா. துரைரத்தினம் தெரிவித்தார்.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினால் நடத்தப்பட்ட 'தமிழ் ஊடகவியலாளரும் நாமும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு கூறியதாவது:-

கொலைப் பயமுறுத்தல்கள் எச்சரிக்கைகள் என்பனவற்றைச் சவாலாக ஏற்றுக்கொண்டு செயற்படுபவன்தான் உண்மையான பத்திரிகையாளன். போராட்டச் சூழலில்தான் பத்திரிகையாளர்கள் வளர்ச்சிபெற முடியும்.

உரைகளை அறிக்கையிடுவதும், எவர் சொல்வதையாவது கேட்டு எழுதுவதும் மட்டும் பத்திரிகைத் தொழிலில் எந்தவித முன்னேற்றத்தையும் தந்துவிடாது. மாறாக எங்கு பிரச்சினைகள் இருக்கின்றதோ, அவற்றைத் தேடிப்பிடித்து வெளிச்சத்துக்குக் கொண்டு வருபவனே உண்மையான பத்திரிகையாளனாவான்.

பலரின் கண்களுக்குத் தெரியாத விடயங்களை, ஊடுருவிக் கண்டுபிடித்து பத்திரிகை மூலம்வெளிவரச்செய்யவேண்டும். பொதுமக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளைப் பற்றி அலசி ஆராய்ந்து வெளிக்கொணர்வதில் பத்திரிகையாளரின்பங்களிப்பு முக்கியமானது.

வெறுமனே செய்தியுடன் மட்டும் நின்றுவிடாது சம்பவங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு பின்னணியிலுள்ளவிடயங்களை அலசி ஆராய்ந்து செய்திக் கட்டுரைகளையும் வெளியிட வேண்டும்.

பத்திரிகையாளர் சந்திப்பு மற்றும் பிரமுகர்களுடனான சந்திப்பின் போது உத்தியோகப்பற்றற்ற முறையில் (Off The Record) தெரிவிக்கப்படும் தகவல்களை ஒருபோதும் வெளியிடக் கூடாது. இது பத்திரிகைத் தர்மம்.

கொழும்பிலிருந்து வெளியாகும் தினசரிகளை விட யாழ்ப்பாணத்தில் இருந்து பிரசுரமாகும் தினசரிகள் சிறப்பாக செய்திகளைப் பிரசுரிக்கின்றன. செய்திகளைச் சிறந்த முறையில் செம்மைப்படுத்தி சுருக்கமான முறையில் அவற்றை வெளியிடும் பண்பில் இந்தப் பத்திரிகைகள் சிறந்து விளங்குகின்றன.

தொடர்பியல் துறையில் கொழும்பிலும் பார்க்க யாழ்ப்பாணம்தான் முன்னேறியிருக்க வேண்டும். துரதிர்ஷ்ட வசமாகஇந்த நிலை இல்லாமல் போய்விட்டது. தென்னிலங்கை பத்திரிகையாளர்களோடு ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களுக்குரிய வசதிகள் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றன.

வடக்கு — கிழக்கில் பத்திரிகையாளர்கள் மீதான அச்சுறுத்தல் அதிகமாகக் காணப்படுகின்றது.

பத்திரிகையாளர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்க வேண்டியது அவசியம்.

— என்றும் அவர் மேலும் கூறினார். (ம-5)

# போதைப்பொருள் பயன்படுத்திய இராணுவஅதிகாரிக்கு அபராதம்

போதைப் பொருளைப் பயன்படுத்திய குற்றத்துக்காக இராணுவ லெப்டினன்ட் ஒருவருக்குக் கடந்த புதன்கிழமை கொழும்பு கோட்டை மஜிஸ்டிரேட் பிரியந்த பெர்னாண்டோ ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

போதைப் பொருள்கள் பாவனையாளர் கூடும் இடமொன்றை முற்றுகையிட்ட கொம்பனிவீதி ப்பொலீஸார், போதைப் பொருளை உபயோகித்துக்கொண்டிருந்த இராணுவ லெப்டினன்டைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட சமயம் அவர் இராணுவச் சீருடையில் இருந்தது குறிப்பிடத்தக்கது. (க-ஒ)

# ஜே. வி. பியின் நிபந்தனைக்கு ரணில் தொடர்ந்து மௌனம்

கொழும்பு, ஜூன் 25
அரசாங்கத்துக்கு திராக ஐ.தே. கட்சியும் மூன்று தமிழ்க் கட்சிகளும் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தருவது என்றால் ரணில் — ஹக்கீம் ஒப்பந்தத்தை வெளியிட வேண்டும் என்று. ஜே.வி.பி., சிஹலஉறுமயக்கட்சி ஆகியன முன்வைத்துள்ள நிபந்தனைக்கு ஐ.தே.க. இன்னுமே தீர்க்கமான முடிவு ஒன்றைத் தெரிவிக்கவில்லை. இந்த நிபந்தனைக்கு ஐ.தே.க. தலைவர் ரணில்விக்கிரமசிங்க தொடர்ந்து மௌனமே சாதித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கும்படி ரணில் விக்கிரமசிங்க, கருஜயசூரிய, டபிள்யூ ஜே. எம். லொக்கு பண்டார, ஜே.என்.சொக்ஸி, லக்ஷ்மன் யாபா அபேவர்தன ஆகியோ ர்கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணி எம். பிக்களான விமல் வீரவன்ச, நந்தன குணதிலக ஆகியோரைச் சந்தித்துக் கேட்டிருந்தனர்.

அப்போதே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும், ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமக்குக் காண்பிக்கும்படி ஜே. வி. பி. எம். பிக்கள் கேட்டுக்கொண்டதாகத் தெரியவருகிறது. (க-75)

## நாட்டுக் கூத்து மாகாணபோட்டிக்கு தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழித்தினப் போட்டிகளில் ''விசேட கூத்து'' பிரிவில் மெலிஞ்சிமுனை றோ. க. த. க வித்தியாலய மாணவர்களின் 'ஊதாரி மைந்தன்' கூத்து முதலிடம் பெற்று மாகாண மட்டப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து மாகாண மட்டப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரேயொரு நிகழ்ச்சி இதுவாகும். (ஐ-7)

## கிரிக்கெட்

வலி. வடக்கு, ஜூன் 25
நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் 7 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில்—

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள கால்இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:–

★ நந்தாவில் மனோன்மணி ச. ச. நிலையம் எதிர் கொக்குவில் வளர்மதி ச. ச. நிலையம்.

★ இணுவில் விவேகானந்தா ச. ச. நிலையம் எதிர் கலைமகள் ச. ச. நிலையம். (க-86)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ். பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு வர்த்தகத்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (க-4)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 25
கொக்குவில் – நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 7. 30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை 6. 30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க-4)

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 25
பருத்தித்துறை புனித தோமையர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை நவநாள் ஆராதனையுடன் மறுநாள் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கூட்டுத் திருப்பலியுடன் திருச்சொருப பவனி இடம்பெற்று உற்சவம் நிறைவுறும்.

உற்சவத்திற்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. இருதயதாஸ் அடிகளார் செய்துள்ளார். (க-173)

★ ★ ★

யாழ். வண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு 'வெவ்வினையை வேரறுக்க வல்லான்' என்னும் பொருளில் நாச்சிமார்கோயிலடி சைவப் புலவர் 'கவிமணி'இராசையா ஸ்ரீதரன் தெய்வீகச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

★ ★ ★

வடமராட்சி, கரணவாய் வெற்றிகாட்டுப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்களுக்கு இடம்பெறும் திருவிழா நிகழ்வில் எதிர்வரும் 4 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க-15)

★ ★ ★

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இந்த உற்சவ நிகழ்வில் எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க-15)

## மாவைக்கந்தன் உற்சவம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 2க
வரலாற்றுச் சிறப்புமிக்5 மாவைக்கந்தன் ஆலயத்தின் வருடாந்த காம்யோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 20 ஆம்திகதி வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசைத் தீர்த்தத்துடன் நிறைவுறும்.

முக்கிய உற்சவங்களாக அடுத்த மாதம் 16 ஆம் திகதி திருக்கார்த்திகைத் திருவிழாவும், 19 திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

திருக்கார்த்திகைத் திருவிழாவன்று சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'கார்த்திகைக்குமரன், என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார்.

திருவிழாக் காலங்களில் தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் இருந்து மாவைக் கந்தன் ஆலயம் வரைக்கும் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-7)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 25
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் மாணிக்கவாசகர் சுவாமிகளின் குருபூசைத் தினத்தையொட்டி இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு திருவாசகமுற்றோதலும், நண்பகல் 12 மணிக்கு அபிஷேகம், பூஜைகளும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறுகின்றன.

மாலை 5 மணிக்கு வீதியுலா நடைபெறும். (ஓ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### ஆனந்தா சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நிகழுமா? வெளிநாடு போகலாமா? நோய்கள் நீங்குமா? காரியம் கைகூடுமா? கேட்டுப்பாருங்கள்! விவரங்களுக்கு: த.சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89334)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ 350/-) தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081 (C/16990)

### தேவை

கோழிப்பண்ணை பராமரிப்பதற்கு 18 வயதுக்கு மேற்பட்ட ஆள் ஒருவர் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்: 19, முருகேசர் வீதி, முத்திரைச் சந்தையடி, நல்லூர் வீடியோ சென்ரர் வளவு. (89394)

### பிரத்தியேக வகுப்புகள் (09-11வரை)

வகுப்பு 09 தொடக்கம் க.பொ.த (சா.த) வரை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படும். தனிப்பட்ட ரீதியாகவோ, குழுக்களாகவோ கற்பிக்கப்படும். சுய விரைங்களுடன் தொடர்புகொள்ளவும்: விள.இல.1310, மே/பா உதயன். (மானிப்பாயில் இருந்து 5 km சுற்றாடலில் உள்ளோர் மட்டும்) (89401)

### A/L பௌதிகவியல்

பௌதிகவியல் இணைந்த கணிதம் பலவருட அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான A/L பயிற்சிகளுடன் முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடித்துக்கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: R.பாலசுப்பிரமணியம், **B.Sc., Dip.in Edu. 17/1**, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3 மணிக்குப் பின். (89402)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஆங்கில தட்டச்சுகள் இரண்டு உடன் விற்பனைக்கு உண்டு. இல.1201, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடி. (89333)

**SHARP PHOTOSTAT** 1016க்குரிய **TONER** (**SF**116) விற்பனைக்கு உண்டு. கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டது. தொடர்புகளுக்கு: கணேசன், கொக்குவில் சந்தி, கொக்குவில்.**T.P.No:2585** (89385)

### தவறிவிட்டது

யாழ்.பல்கலைக்கழக 4ஆம் வருட வணிகத்துறை மாணவி ஜமேலா வேல்சாமி என்பவருடைய கைச்சங்கிலி 23.06.2001 அன்று குளப்பிட்டி வீதிக்கும் திருநெல்வேலிக்கும இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரஜீவன் உணவகம், குளப்பிட்டிச் சந்தி, கொக்வில் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (89392)

பலாலி தெற்கு, வசாவிளானைச் சேர்ந்த சிவபாதம் ஸ்ரீபிரியா என்பவருடைய விசேட அ.அட்டை(இல. 0907013637) 19.06.2001 அன்று கட்டப்பிராய்க்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கல்வியங்காடு சந்துரு கொம்னிக்கேசனில் ஒப்படைத்து உதவவும். (89388)


# வல்லை மயானம் 5 வருடங்களின் பின் மீண்டும் மக்கள் பாவனைக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூன்25

இராணுவத்தினரின் காவலரண் அகற்றப்பட்டதையடுத்து ஐந்து வருடங்களின் பின்னர் வல்லை மயானம் கடந்தவாரம்முதல் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டியின் ஒரு பகுதி, இமையாணன் முதல் கல்வம் வரையுள்ள பகுதிமக்களின் பாவனையில் இருந்துவந்த இந்த மயானம், வடமராட்சிப் பகுதியில் இராணுவம் நிலைகொண்ட காலத்திலிருந்து - 1996 ஏப்ரல் மாதம் முதல் - இற்றை வரை மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவில்லை.

இம் மயானத்தின் மத்தியில் இராணுவம் காவலரண் அமைத்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. தற்போது இக்காவலரண் அங்கிருந்து அகற்றப்பட்டு மயானம் கடந்தவாரம் முதல் மீண்டும் மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது. (க-15)

## விஞ்ஞானச் சங்கக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்25

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத்தும் கருத்தரங்குத் தொடர்-3 நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் "மனித உரிமைகளைப் புரிந்துகொள்ளல்" என்னும் தலைப்பில் கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் வண. பிதா அல்போன்ஸ் இருதயநாயகம் பேனாட் உரையாற்றவுள்ளார். (க-4)

## 15 லட்சம் ரூபா செலவில் வீதித் திருத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

வலி. தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகள் 5லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது என வலி.தெற்கு பிரதேச சபையின் தலைவர் கை.கமலசேகரன் அறிவித்துள்ளார்.

பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ், ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதம், சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் லவ் வீதி, ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியில் உள் மயான வீதி, மாரிட்டி வீதி ஆகிய வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இதேவேளை, 8லட்சம் ரூபா செலவில் உடுவில் வெட்டுக்கட்டைப் பிள்ளையார் வீதியும் புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## பழைய இடத்தில் கொடிகாமம் தபாலகம்

தென்மராட்சி,ஜூன்25

வடமராட்சிப் பகுதியில் இயங்கிவந்த கொடிகாமம் தபால் அலுவலகம் அதனுடன் இணைந்த விடத்தற்பளை, மிருசுவில், மந்துவில், கச்சாய் ஆகிய உப தபால் அலுவலகங்கள் ஆகியவை இன்று தொடக்கம் கொடிகாமம பகுதியில் இயங்கவுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் இயங்கிய இந்த அலுவலகங்கள் நேற்று முன்தினம் மூடப்பட்டு அனைத்துப் பொருள்களும் வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டன.

உப அஞ்சல் அலுவலகங்கள் மறு அறிவித்தல் வரை கொடிகாமத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-11)

## பசுமாடு திருட்டு

வடமராட்சி,ஜூன்25

வீட்டுக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் கட்டப்பட்டிருந்த 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு ஒன்று இரவு நேரம் திருடப்பட்டுள்ளது.

மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளை வீதியில் உள்ள காணி ஒன்றிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். ஆழ்வாப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான மாடே இவ்வாறு திருடப்பட்டதாகும்.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறைப் பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (ஐ-173)

## நாடகப் போட்டி

சண்டிலிப்பாய்,ஜூன்25

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் வருடாந்தம் நடத்தப்படும் கல்லூரி இல்லங்களுக்கு இடையிலான நாடகப்போட்டி எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறவுள்ளது (க-135)

# மாவைக் கந்தன் உற்சவ காலத்தில் விசேட போக்குவரத்துச் சேவை

வலி.வடக்கு,ஜூன்25

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில வருடாந்த உற்சவ காலத்தில் நாளாந்தம் பக்தர்கள் ஆலயத்துக்குச் சென்று வருவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

515ஆவது படையணியின் கட்டளை அதிகாரி தலைமையில் தெல்லிப்பழையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் இது குறித்து முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்து காலை 8.30 மணிமுதல் அடியார்கள் உட்செல்ல அனுமதிக்கப்படுவார்கள். பிற்பகல் 3 மணிக்கு கடைசி பஸ் சேவை நடத்தப்படும்.

திருவிழா நடைபெறும் 25 தினங்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இரண்டு மினிபஸ்களும், இரண்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களும் சேவையில் ஈடுபடவுள்ளன.

மினிபஸ் கட்டணமாக 8 ரூபாவும் பஸ் கட்டணமாக 10 ரூபாவும் அறவிட முடிவாகியுள்ளது.

விசேட திருவிழாத் தினங்களில் மேலதிகமாக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

ஆடி அமாவாசையன்று காங்கேசன்துறை வழியாக விடுவதுடன் மேலதிகமாகச் சேந்தாங்குளம் பாதை வழியாகவும் அடியார்கள் சென்றுவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (க-86)

# கந்தரோடைப் பகுதி அபிவிருத்தி பணிகளுக்கென நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூன்25

கந்தரோடை கலைமதி சனசமூக நிலைய நிர்வாகிகள் மற்றும் அவ்வூர்ப் பிரதேச நலன்விரும்பிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்து, கந்தரோடை கற்பொக்கணை வீரகத்திப் பிள்ளையார் ஆலய புனரமைப்புக்கு 5 லட்சம் ரூபா நிதியை வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கீடு செய்துள்ளார்.

கந்தரோடை கலைமதி சனசமூக நிலைய நிர்வாகத்தினர் மற்றும்அவ்வூர்ப் பிரதேச நலன்விரும்பிகள் கந்தரோடை கற்பொக்கணை பிரதேச அபிவிருத்தி தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர் கை.கமலசேகரனும் (பாபு) கலந்துகொண்டார்.

அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின்போது கலைமதி சனசமூக நிலையத்தின் பராமரிப்பின் கீழ் இயங்கும் மழலைகள் கல்விப் பூங்காவுக்கு ஒரு விளையாட்டுப் பூங்கா அமைப்பதற்கு 75ஆயிரம் ரூபாவையும் மழலைகள் கல்விப் பூங்காவுக்கு தளபாடங்கள் கொள்வனவுக்காக 40 ஆயிரம் ரூபாவையும் அமைச்சர் உடனடியாக வழங்கினார்.

இதேவேளை கற்பொக்கணை ஞானவைரவர் ஆலய புனரமைப்புக்கு 200 பைக்கற் சிமெந்தையும் கலைமதி சனசமூக நிலைய கட்டடப் புனரமைப்புக்கு 75 பைக்கற் சிமெந்தையும் வழங்குவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

கலைமதி சனசமூக நிலையத்தினர் அமைச்சருடனான கலந்துரையாடலின்போது விடுத்துள்ள, கந்தசாமி வீதி புனரமைப்பித்தல், கந்தையா உபாத்தியாயர் வீதியையும் கந்தசாமி வீதியையும் இணைக்கும் வீதியை புனரமைத்தல், கந்தையா உபாத்தியாயர் வீதியிலிருந்து சங்குவேலி வடக்குப் பகுதியையும் டச்சு வீதியையும் இணைக்கும் வீதி புனரமைத்தல் ஆகிய கோரிக்கைகளை விரைவில் வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் நிதி மூலம் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க)

## ஜி.சீ.ஈ. உயர்தர. மாணவருக்கான கருத்தரங்கு

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு சைவ பரிபாலன சபையின் சைவ இளைஞர் நற்பணி மன்றத்தின் ஆதரவில் எதிர்வரும் 26ஆம், 28ஆம் திகதிகளில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கு இந்துநாகரிகம், தமிழ் ஆகிய பாடங்களுக்காக (2001 இல் பரீட்சை) தோற்றும் மாணவருக்காக விசேடமாக நடத்தப்படுகிறது.

## விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு

வடமராட்சி,ஜூன்25

புலோலி கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 27ஆவது ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டியும் அடுத்த மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ளன.

விளையாட்டுப் போட்டியில் வெளிக்கழகங்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி, மரதன் ஓட்டம்., கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டுக் கழகங்கள் சனசமூக நிலையச் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-173)


மெலிஞ்சிமுனை றோ.க.த.க. வித்தியாலய

ஊதாரி மைந்தன் திருமலை செல்கிறது

தீவக கல்வி வலயத்தின் ஒரேயொரு நிகழ்வாக **'ஊதாரி மைந்தன்'** விசேட கூத்து மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டியில் பங்குபெறச்செல்வதையும், பங்கேற்ற ஒன்பது நவமணிகளையும், நெறிப்படுத்திய தங்கமலரையும் *பாராட்டி வாழ்த்தும் :*

**புதிய நதியா நகைமாடம்**

103, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(89400)


## 31ஆம் நாள் நினைவும்

### ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 23 - 01 - 1974



உதிர்வு 27 - 05 - 2001

### அமரர் குமாரசாமி சிவகுமார்

27.05.2001 அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகனின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் -

*நாளை (26.06.2001) செவ்வாய்க்கிழமை* எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*முதலியார் வளவு,*
*வதிரி, கரவெட்டி.*

(89403)

சு.குமாரசாமி
*குடும்பத்தினர்.*

## ஆறாம் மாத நினைவலைகள்

தோற்றம் 25 - 04 - 1945



மறைவு 25 - 12 - 2000

### செல்வி பரமானந்தம் சரோஜினிதேவி

*எமை வாழவைத்த ஒளிவிளக்கே!*
*ஒளியிழந்து ஆறுதிங்கள் அகன்ற வேளையில்*
*ஆறாத்துயரோடும் ஆறாத மனத்தோடும்*
*நீறான உமையே நினைந்துருகி வாழும் :*

அன்பு நிறைந்த
**அம்மா, சகோதரிகள்,**
**பெறாமக்கள், மைத்துனர்.**

***124/2**, செல்லர் வீதி,*
*நல்லூர்.*

(89404)

சிவமயம்
சைவ பரிபாலன சபையின்

**சைவ இளைஞர் நற்பணி மன்றம் நடத்தும்**
**க.பொ.த. உ/த 2001 மாணவர்களுக்கான**
**பரீட்சை வழிகாட்டற் கருத்தரங்கு**

பாடம் :- **இந்து நாகரிகம், தமிழ்**
காலம் :- 26-06-2001 செவ்வாய் } காலை 9 மணி முதல்
28-06-2001 வியாழன் } மாலை 4 மணிவரை
இடம் :- நாவலர் ஆச்சிரம மண்டபம்
66, கல்லூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

**கருத்தரங்கை வழி நடத்துவோர்:**

**இந்து நாகரிகம்**
திருமதி R.யோகானந்தம் - ஆசிரியர், திருக்குடும்பக் கன்னியர்மடம் ம.வி.
திரு. I. கமலநாதன் - ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி
திரு. T.ஸ்ரீஸ் - பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

**தமிழ்**
திரு. K.அருந்தாகரன் - விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்
திரு. N.தமிழேந்திரன் - ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி.
திரு. I.கமலநாதன் - ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி
திரு. K.குழந்தைவேல் - ஆசிரியர், உயர்கலைக் கல்லூரி

செயலாளர், ப.ஓங்காரமூர்த்தி
சைவ நற்பணிமன்றம். இணைப்பாளர்
(C/17317)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணுலகில் 10 - 04 - 1941
விண்ணுலகில் 27 - 05 - 2001



## திருமதி அப்புத்துரை அன்னம்மா

**மாண்பு நிறை அம்ம எம் இல்லத்து ஒளி விளக்கே!**
**முப்பது நாள்கள் அகன்றதோ அம்ம நீ மறைந்தே?**
**மீண்டும் நீ வாராயோ மேதினிதனை நோக்கி? நாம்**
**வேண்டும் வரமெல்லாம் ஈதேதான் இறைவனிடம்!**
**கணப்பொழுதும் மறக்காத கணவர் மக்களொடு**
**குணக்குன்றே உனை மறவா மருமக்கள் தானும்**
**இணக்கமுடன் நீ நேசித்த பேரக் குழந்தைகளும்**
**வணக்கமுடன் நின் ஆத்ம சாந்திக்கே வேண்டுகிறோம்!**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாளை (26.06.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
**கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*'அரசோலை',*
*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.* (89414)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 29 . 06 . 1944
உதிர்வு 26 . 05 . 2001



அமரர்

## நடராசா மயில்வாகனம்

**26.05.2001 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (25.06.2001) திங்கட்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

*சிவன் வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.* (89405)

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

## யாழ்.இந்துவில் சிறப்புரை

யாழ்ப்பாணம்,ஜூன்25

உலகப் போதைப்பொருள் தடுப்பு தினத்தை முன்னிட்டு யாழ்.இந்துக் கல்லூரியின் நல்லொழுக்கக் கழகம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் குமார சுவாமி மண்டபத்தில் சிறப்புரை ஒன்றை ஒழுங்குசெய்துள்ளது.

வைத்திய கலாநிதி செ.சு.நச்சினார்க்கினியர் இந்தச் சிறப்புரையை நிகழ்த்துவார். (உ-7)

## கல்வி ஒளிபரப்பு

யாழ்ப்பபாணம்,ஜூன்25

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ்.மாணவர்களின் நன்மை கருதி ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் யாழ். சேவையில் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளன என யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் தினமும் இரவு 7.30 மணி தொடக்கம் 8.30 மணிவரைக்கும் இந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்புச் செய்யப்படும் என பாதுகாப்புப படைத் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## குடாநாட்டில் அழிந்துவரும் எலுமிச்சை மரங்கள்

சுன்னாகம்,ஜூன்25

யாழ்.குடாநாட்டில் எலுமிச்சை மரங்கள் அதிகளவில் அழிந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஒருவித நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகும் எலுமிச்சை சிறிது சிறிதாக பட்டுவருவதாகவும் - அண்மைக் காலத்தில் இவ்வாறு பல எலுமிச்சை மரங்கள் அழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-27)


பாடசாலை மாணவர்களுக்கான
MONITOR, PREFECT
பட்ஜ், நவீன இயந்திர சாதன மூலம் மிகக் குறைந்த கட்டணத்தில் தலா
**25 ரூபா மட்டுமே**
விரங்களுக்கு:
**S.S.யசோதரன் ஆட்ஸ்,**
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக)
(89411)

**ராஜா** யாழ்ப்பாணம்
9வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
CITIZEN
சிட்டிசன்
தினசரி 10.30, 2.00,5.00(புதிய நேரம்)
(C/17090)

**லஷ்சுமி** இணுவில்.
விஜயகாந்த்,லைலா, நாசர்
நடிப்பில்
கள்ளழகர்
(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
இனிய பாடல்கள், சண்டை காட்சிகள்
நிறைந்த படம்.
தினசரி காட்சிகள : 10.30, 2.30 (ப.நே.)
(89421)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜயகாந்த், மீனா
நடித்த
சேதுபதி IPS
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறு விசேட காட்சி 6.00 மணிக்கு
(89362)


# நன்றியுடன்....

எமது அன்புத் தந்தையார்
**ஆசீர்வாதம் யோசேப்பு**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், மரணச் சடங்கில் வந்து கலந்துகொண்டு துயரில் பங்கு கொண்டோருக்கும், இரங்கல் செய்தி அனுப்பியோருக்கும் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், பல்வேறு உதவிகளை வழங்கியோருக்கும் எமது நன்றிகள். குறிப்பாக குருமுதல்வர், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், குருமட மாணவர்கள், சக உத்தியோகத்தர்கள், திருமறைக் கலாமன்றத்தினர், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆகிய அனை வருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் உள்ளத்தின் ஆழத்திலி ருந்து நன்றியைக் கூறி நிற்கின்றேன்.

*425, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
யோ.யோண்சன் ராஜ்குமார்
(89406)

# கண்ணீர் அஞ்சலி

எமது கிறிஸ்தவ நாகரிக விரிவுரையாளர்
**தி.த.ரங்கநாயகம்**
அவர்களின் அன்புத் தந்தை

## பொன்னையா றெமிசியஸ் தம்பிநாயகம்

அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்., பேராதனை பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம்.
(89417)

# 90ஆவது நாள் நீங்கா நினைவுகள்

மலர்வு 17 . 05 . 1942
உதிர்வு 29 . 03 . 2001



அமரர்

## கந்தையா கந்தப்பிள்ளை

(மாவிட்டபுரம்)

**இன்னும் பல ஆண்டுகள் எம்மோடு வாழ்வீர்கள் என**
**எண்ணி இருந்தோம் அப்பா!**
**நடுவழியில் நம்மையெல்லாம் விட்டுச்**
**சடுதியிலே சென்றதேன் அப்பா?**
**காலமெல்லாம் உங்கள் நினைவாய் வாழ்வோம் அப்பா!**
**ஞாலமுள்ள வரை நினைவில் நினைப்போம் அப்பா!**

*நவாலி றோட்,*
*ஆனைக்கோட்டை.* (89410)

உங்கள் பிரிவால் துயருறும்:
**தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.**

# மரண அறிவித்தல்

## டானியல் பீற்றர்

(உரிமையாளர், ராஜன் எலக்ரோனிக்ஸ்)

உரும்பிராய் தெற்கு, ஒஸ்கா லேனை வசிப்பிடமாகக் கொண்ட டானியல் பீற்றர் அவர்கள் நேற்று (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும், ராஜன்(சண் சைன் வீடியோ), தர்சினி, தேவகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோசேப்பின் அவர்களின் அன்புச் சகோதரனும் சிவசக்தியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(25-06-2001) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நல்லடக்க ஆராதனைக்காக புனித அடைக்கல அன்னை ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஒஸ்கா லேன்,*
*உரும்பிராய் தெற்கு.*

தகவல்:-
மகன் (ராஜன்)
(89419)

# மட்டக்களப்பில் தொடர்ந்து பிஸ்ரல் குழுவினர் கைவரிசை

மட்டக்களப்பு,ஜுன்25

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினர் என்று கருதப்படுவோர் மேற்கொண்ட தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் உயிரிழந்தார்.

அதைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத்தை சுற்றிவளைத்துப் படையினர் தேடுதல் மேற்கொண்ட சமயம் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் சயனைட் உட்கொண்டு உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப் பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பிஸ்ரல் குழுவின் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார். (உ-3-9)

# மட்டுவிலில் இரு மிதிவெடிச் சம்பவங்கள்: ஒருவர் காலை இழந்தார்; மற்றவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜுன்25

மட்டுவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற இரு வேறு மிதிவெடிச் சம்பவங்களில் சிக்கி இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்து புத்தூரில் வசித்து வந்தவரான இராசலிங்கம் ரவிரங்கன்(வயது 22) என்ற இளைஞர் நேற்றுக் காலை மட்டுவில் பகுதிக்கு தமது வீடு பார்க்கச் சென்ற வேளை மிதி வெடியில் சிக்குண்டு இடது விலாப் பகுதியிலும் இடது காலிலும் படுகாயமடைந்துள்ளார்.

அதேவேளை மட்டுவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து சிறுப்பிட்டி தெற்கில் வசித்து வந்தவரான செல்லன் அரியகுட்டி (வயது 53) என்பவர் மிதி வெடியில் சிக்குண்டு தமது இடது காலை முழங்காலுக்கு கீழ் இழந்துள்ளார்.

இவர்கள் இருவரும் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-4-15)

# நகைகள் மீட்டு ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்25

அறுகுவெளி - தனங்களப்பு பகுதியில் உள்ள வீடொன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 23 பவுண் தங்க நகைகளை மீட்ட படையினர், அவற்றை உரியவரிடம் கையளித்துள்ளனர் என யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

தனங்களப்பைச் சேர்ந்த பரமநாதன் மகேஸ்வரன் என்பவருக்குச் சொந்தமான நகைகளே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தனது நகைகளை மீட்டுத் தருமாறு மேற்படி நபர் 521 ஆவது படையணியினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார் எனவும் -

அதனையடுத்து அங்கு சென்ற படையினர் சுமார் ஒரு இலட்சத்து 41 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த நகைகளை மீட்டனர் எனவும் -

யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம்

கரவெட்டி

### வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | | | |
|---|---|---|---|
| 26-06-2001 | செவ்வாய்க்கிழமை | - கொடியேற்றம | பகல் 9.30 மணி |
| 29-06-2001 | வெள்ளிக்கிழமை | - மஞ்சம் | மாலை 5.00 மணி |
| 30-06-2001 | சனிக்கிழமை | - சப்பறம் | மாலை 5.00 மணி |
| 01-07-2001 | ஞாயிற்றுக்கிழமை | - வசந்தோற்சவம் | மாலை 5.30 மணி |
| 02-07-2001 | திங்கட்கிழமை | - கைலாயவாகனம் | மாலை 5.00 மணி |
| 03-07-2001 | செவ்வாய்க்கிழமை | - வேட்டை உற்சவம் | பிற்பகல் 2.30 மணி |
| 04-07-2001 | புதன்கிழமை | - தேர்த்திருவிழா | முற்பகல் 9.00 மணி |
| 05-07-2001 | வியாழக்கிழமை | - தீர்த்தோற்சவம் | முற்பகல் 9.30 மணி |

(C/17222)

- ஆலய பரிபாலன சபை.

## திருமண நன்றிநவிலல்



நெல்லை குமரன் கலியாண மண்டபத்தில் 11.06.2001 நடைபெற்ற எமது திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்து எம்மைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்திய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக!

பாஸ்கரன் ~ சசிகலா
தம்பதிகள்.

நெல்லியடி.

(89408)

## தளுவத்த திரும்புகிறார்

கொழும்பு,ஜுன்25

அமெரிக்காவுக்குத் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்றிருந்த கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் றொஹான் தளுவத்த நாடு திரும்பவிருக்கின்றார்.

இவரின் வருகையை ஒட்டி தியத்தலாவ இராணுவ முகாமில் விசேட இராணுவ அணிவகுப்பு ஒன்று ஏற்பாடாகியுள்ளது.

வெளிநாடு சென்ற இவர் மீண்டும் பணிக்குத் திரும்பமாட்டார் என்றும் -

அவரது இடத்துக்கு மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப்படவிருக்கின்றார் என்றும் -

கடந்த வாரங்களில் செய்திகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

## ஜே.வி.பியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்ஸ தெரிவித்தார்.

ஜே.வி.பியின் முடிவை ஐ.தே. கட்சி வரவேற்றுள்ளது.

இளைஞர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாகக் கொண்ட ஜே.வி.பியின் இந்த முடிவைத் தாம் வரவேற்பதாகவும் -

எதிர்கால நலனைக் கவனத்தில் எடுத்து அவர்கள் செயற்படுவார்கள் எனத் தாம் நம்புவதாகவும் -

ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார். (உ-3-9)

## சமாதான....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

களை நவீனமயப்படுத்துவதற்கும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுவதற்காக தனது அரசு எடுத்த பெரும் பிரயத்தனங்களை - சுமந்த பெரும் நோவுகளை - அங்கு விளக்கினார்.

பொதுமக்களுக்கு கஷ்டங்களைக கொடுத்தே இச்செலவுகள் செய்யப்பட்டன. இத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டும் கூட, இராணுவம் நல்ல பெறுபேறுகளைத் தருவதற்குக கஷ்டப்படுகின்றது. இத்தகைய நிலையில் அரசு என்ன செய்யமுடியும் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

### சந்திரிகா கூறுவது வெறும் புலம்பல் அல்ல

யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து முகாம்களுக்குள் இராணுவத்தை முடக்கப்போவதான அவரது யோசனை வெறுமனே அவரது புலம்பல் மட்டுமல்ல.

ஆதாயங்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் - பெரும் பின்னடைவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இராணுவத்துக்கென - போர் முயற்சிகளுக்கென - பெரும் தொகைப் பணத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கும் அரசின் நிலைப்பாட்டை மனம் திறந்து அவர் வெளிப்படுத்தினார்.

300 துருப்புக்கள் இறக்கவும் ஆயிரத்துத் 900 பேர் காயமடையவும் காரணமாக அமைந்த - ஏப்ரல் 24 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட - 'அக்கினிச் சுவாலை' நடவடிக்கையைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களே இந்த நிலைமைக்குக் காரணம்.

இந்தப் பின்னணியில், சமாதானத் தெரிவை அவசரமாக முன்னெடுப்பதைத் தவிர வேறு வாய்புகள் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு இல்லை.

அதைச் செய்கின்ற அதேசமயம-

தாக்குதல் நடவடிக்கைகளையும வான் தாக்குதல்களையும் இடைநிறுத்துவதைப் பயன்படுத்தி புதிய ஆதாயங்களைப் புலிகள் பெற்றுக் கொள்ளக்கூடிய இராணுவ யதார்த்தங்களையும் அவர் கவனத்தில் கொண்டுள்ளார்.

அத்தகைய ஆதாயங்கள், எதிர்காலச் சமாதான பேச்சுகளில் புலிகளின் பேரம் பேசும் வலுவை அதிகரிக்கச் செய்யும் என்பதைக் கூறத் தேவையில்லை.

ஆனால் மிக முக்கியமானது என்னவென்றால் மேலும் நவீனப்படுத்தப் பட்டிருக்கும் படைகளின் மனோவலிமையில் அது ஏற்படுத்தும் தாக்கம் மிக மோசமானதாக இருக்கும். அது அரசாங்கத்தை விரும்பத்தகாத நிலைககுத் தள்ளும்.

நடாளுமன்றத்தில் இருக்கும் ஐ.தே.க. மற்றும் நாடாளுமன்றில் உள்ள 97 சட்டமாக்கும் உறுப்பினர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராகக் கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை வேறு எரிச்சலூட்டும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# ஆயுதக் கொள்வனவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்குத் தெரியப்படுத்தியிருப்பதை அடுத்து கொழும்பில் நிலைமைகள் நிச்சயமாக மிகவும் மனச்சோர்வு தருபவையாக மாறிவிட்டன.

பல்வேறு இராணுவ கனரகப் பொருள்களுக்கான அனேகமான கொடுப்பனவுகள் அனைத்தும் காலம் தள்ளிப் போடப்பட்டுவிட்டன அல்லது காலம் குறிப்பிடப்படாது பிற்போடப்பட்டுவிட்டன என்று படைகளின் உயர் மட்டத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

படைகள், உள்ளூர் மற்றும் வெளியூர் விநியோகஸ்தர்களுடன் இப்போதும் பேச்சு நடத்தி ஒப்பந்தங்களில் கையெழுத்திடலாம் என்றாலும் இந்தப் பொருள்களுக்கான கொடுப்பனவுகளை குறிப்பிட்ட காலத்துக்கு திறைசேரி வழங்கமாட்டது என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் கருத்து என்னவென்றால் கனரக ஆயுதங்கள், யுத்த டாங்கிகள், விமானங்கள், போர்க்கப்பல்கள் மற்றும் வாகனங்கள் என்பவை எதிர்வரும் அண்மைய காலத்தில் படைகளுக்குக் கிடைக்கமாட்டா என்பது தான்.

இப்போதிருப்பதைத் தவிர, புதிய வளங்களைப் பயன்படுத்துவதற்கான வசதி கிட்டாது என்பதால் அது பெரும தாக்குதல் நடவடிக்கை ஏதும் எந்தப படையாலும் இப்போதைக்கு மேற்கொள்ளப்படும் என்பதைப் புறந்தள்ளிவிட்டது. கப்பல்களில் ஆயுங்களும், யுத்த டாங்கிகளும் வந்து சேர்ந்து சில வார காலங்களுக்குள் இராணுவம் பெரிய தாக்குதல் நடவடிக்கைகளை அடிக்கடி ஆரம்பிப்பது வழமை.

என்றாலும், புலிகளின் கைகளினால் பெரிய தோல்விகள் ஏற்படுத்தப்படும்போது, வேறு வழி ஏதுமின்றி, கொள்வனவுக்காக அவசர நிதி உதவிகளை அரசு அங்கீகரிக்கும். அந்தளவு நிதியை அரசால் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது அடுத்த கேள்வியாகும்.

இவையாவற்றினதும் அர்த்தம் என்னவென்றால் -

19 வருட கால யுத்தத்தின் பின்னர், பொருளாதார ரீதியில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையை எட்ட முடியாத நிலைக்கு நாடு வந்துள்ளது என்பதுதான்.

அரச கைத்தொழில் நிறுவனங்களை தனியார் மயப்படுத்திய பின்னரும் - தனியார்துறை மற்றும் பொதுமக்கள் மீது காரணம் இன்றி அதிக வரிகளை விதித்து வாழ்க்கைச் செலவை உயர்த்திய பின்னரும் கூட - குறிப்பிடத்தக்க அளவுக்கு இன்னும் நிதி நிலையை உயர்த்துவதற்கு அரசுக்கு புதிய வேறு வழிகள் தென்படவேயில்லை.

வன்னியில் நவம்பர் 1999 இல் பெரும் பின்னடைவையும், அதன் பின்னர் ஆனையிறவு வீழ்ச்சி மற்றும் யாழ்நகரை நோக்கிய புலிகளின் அணிவகுப்பையும் அடுத்து, போரில் வெல்லும் வலிமையை ஆயுதப்படைகள் இழந்த பின்னர், இவை யதார்த்தத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தனதான் - என்றுள்ளது.(உ)

## இரவுநேர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும்.

இதேவேளை -

தம்மால் கொள்வனவு செய்யப்படவுள்ள மீன் வகைகள் பற்றிய விவரங்களையும், அவற்றுக்குரிய விலைப்பட்டியலையும் படையினர் கடற்றொழிலாளர் சமாசப் பிரதிநிதிகளிடம் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-7-117-15)

## சனத்தொகை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் மதிப்பீட்டுப் பணி இடம்பெறாவிட்டால் வெளிநாட்டு உதவிகளில் பாதிப்பு ஏற்படும் என்றும் அவை தெரிவித்துள்ளன.

யாழ். குடாநாட்டில் இந்தப் பணிகளை நிறுத்தினால் 45 கோடி ரூபா வீண விரயமாகிவிடும் என்றும் அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை -

குடிசன மதிப்பீட்டின் முதற் கட்டப்பணிகள் இன்று ஆரம்பமாகின்றன. இந்தப் பணிகள் அடுத்த மாதம் 5 ஆம திகதி வரை இடம்பெறும்.

இறுதிக்கட்டப் பணிகள் அடுத்த மாதம் 17 ஆம் திகதி மாலை 6 மணியில் இருந்து நள்ளிரவு 12 மணி வரை நடைபெறும் என்று குடிசன மதிப் பீட்டுப் புள்ளிவிவரத் திணைக்களப் பணிபபாளர் நாயகம் ஜி.ஜி. டபிள்யூ. நாணயக்கார தெரிவித்துள்ளார். (உ-3)


இதோ கணணி மூலம் வீடியோ மிக்சிங் Adobe Premiere & Cool 3D




பயிற்சி வகுப்புக்கள் மற்றும் Adobe Photoshop CorelDROW வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன

பலரின் வேண்டுகோளுக்கிணங்க மாலை (6-8)நேர வகுப்பாகவும் நடை-பெறும். மேலதிக விபரங்களிற்கு

Director

28,29,30-06-2001

STP Computer World (Pvt) Ltd.
54A, Palaly Road, kantharmadamJaffna
E.mall:stpedu@hotmall.com T.P:2674


## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை பற்மநாதன் (பற்பு)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை பற்மநாதன் நேற்று (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - யோகம்மா ஆகியோரின் அன்புப் புத்திரனும் ரகுநாதன், தில்லைநாதன், சறோஜினிதேவி செல்வரத்தினம், மனோகரன், நித்தியானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகேந்திரன், சிவமணி, கெங்காதேவி, பரிமளவள்ளி ஆகியோரின் மைத்துனரும் தர்மலிங்கத்தின் பெறாமகனும் ஈஸ்வரியம்மா(பவளம்), மார்க்கண்டு, மயில்வாகனம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23/1, நாவலர் றோட், நல்லூர் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து, இன்று (25-06-2001) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23/01, முதலியார் வீதி,*
*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:-
கா.ரகுநாதன்
(ரகுபதி - சகோதரன்)

(C/17219)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.